# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை 21 | திங்கட்கிழமை | (03-05-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 136



ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.


# அமைச்சர் ஹெல்கீசன் ஜனாதிபதியுடன் சந்திப்பு

## சமாதான முன்னெடுப்பின் முக்கிய விடயங்கள் ஆராய்வு

(நமது நிருபர்)

**இடைநிறுத்தப்பட்டிருந்த சமாதான பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்குடன் இலங்கை வந்துள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை சந்தித்து சமாதான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பாக ஆக்கபூர்வமான கலந்துரையாடலை நடத்தியுள்ளார்.**

நடந்து முடிந்த பொதுத் தேர்தலின் பின் ஆட்சி அமைத்துள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த ஒருவருட காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த சமாதானப் பேச்சுவார்த்தையை விடுதலைப் புலிகளுடன் மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக முன் முயற்சிகளை மேற்கொள்ள வருமாறு நோர்வேக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அந்த அழைப்பை ஏற்று இலங்கை வந்திருந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் நேற்று முன்தினம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த பின் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

நுவரேலியாவில் இடம்பெற்ற இச்சந்திப்பில் நோர்வே தரப்பில் பிரதி வெளிவிவகார அமைச்சருடன் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கான் ஆகியோரும் கலந்துகொண்டனர். இலங்கை அரசின் சார்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சருடன் நேற்று இடம் பெற்ற முதலாவது சந்திப்பில் விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சியை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பான தனது

(12-ம் பக்கம் பார்க்க)

## கந்தப்பொல படுகொலையின் எதிரொலி
# மலையகம் முழுவதும் இன்று வேலை நிறுத்தப் போராட்டம்

(கொழும்பு)

கந்தப்பொலவில் அண்மையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து இன்று மலையகம் முழுவதும் அடையாள வேலை நிறுத்த போராட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்த அடையாள வேலை நிறுத்த போராட்டத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஏற்பாடு செய்துள்ளது.

கந்தப்பொல சம்பவத்தை கண்டித்து இன்று நடைபெறவுள்ள போராட்டத்தை முன்னிட்டு தமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வியாபார மையங்கள் அனைத்தையும் மூடுமாறு நுவரேலியா பிரதேச சபையின் தலைவர் பி. சக்திவேல் வர்த்தகர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் மலையக பெரும் தோட்டங்களில் ஏற்கனவே திட்டமிட்டவாறு இன்று அடையான வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக மலையக மக்கள்

(12ம் பக்கம் பார்க்க)

# அநுரா இன்று டுபாய் பயணம்

(கொழும்பு)

சுற்றுலாத்துறை அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க இன்று டுபாய்க்கு பயணமாகிறார். டுபாயில் நடைபெறும் அரேபிய சுற்றுலா மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே அவர் அங்கு செல்லவுள்ளார். (ச.121)

# மோட்டார்சைக்கிள்-பஸ் விபத்தில் இளைஞர் பலி

## அரியாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை தபால்கட்டை சந்திப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற பஸ்-மோட்டார்சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் பலியானார்.

மேற்படி சம்பவத்தில் உதயன் பத்திரிகை நிறுவனத்தில் விநியோகப்பகுதியில் கடமையாற்றும் அளவெட்டியைச் சேர்ந்த சிவநேசன் பாபுசங்கர் (வயது-28) என்ற இளைஞரே பலியானவராவார்.

மோட்டார்சைக்கிளில் தென்மராட்சிப் பகுதிக்கு பத்திரிகையை விநியோகித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை அரியாலை தபாற்பெட்டிச் சந்திப் பகுதியில் வடபிராந்திய போக்குவரத்துக்கு சொந்தமான பஸ் ஒன்றுடன் இவ் விபத்து இடம்பெற்றது.

பிரஸ்தாப இளைஞரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந)

# படகிலிருந்து தவறி விழுந்தவரை கடலலை அடித்துச் சென்றது

## நெடுந்தீவு கடலில் சம்பவம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி புறப்பட்ட சமுத்திர தேவா பயணிகள் படகிலிருந்து கடலினுள் தூக்கி வீசப்பட்ட பயணி ஒருவர் காணாமற் போயுள்ளார். இச் சம்பவம் நேற்று பி.ப. 2.00 மணியளவில் நெடுந்தீவு கடற்பரப்பில் இடம்பெற்றுள்ளது.

சங்கானையைச் சேர்ந்த யாழ். செனஜோன்ஸ் கல்லூரியின் பொருளியல் ஆசிரியரான ரட்ணம் ஜெயசீலன் (வயது -35) என்பவரே படகிலிருந்து தூக்கி வீசப்பட்டு காணாமற் போனவராவார்.

நெடுந்தீவிலிருந்து சுமார் 40 பயணிகளை ஏற்றிக்கொண்டு குறிகாட்டுவான் நோக்கிப் படகு புறப்பட்டு வந்துகொண்டிருந்த போது பலத்த காற்றுடன் மழைபெய்யத் தொடங்கியது.

(12-ம் பக்கம் பார்க்க)

# மட்டு. பழவியாபாரி சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மண்முனை ஒள்ளிக் குளத்தில் இளைஞர் ஒருவர இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லபப்பட்டுள்ளார். சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர் ஆரயம்பதியை சேர்ந்த பழ வியாபாரியான பொன்னையா ஜீவரட்ணம் (வயது -25) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப இளைஞனை துப்பாக்கி நபர்கள் மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்று சுட்டுக் கொன்றதாக தெரிவிக்கப்படுகிறது.

(வ)

## புதிய அரசின் சமாதான முயற்சி
# நோர்வேத் தூதுவர் எரிக்சோல் தமிழ்ச்செல்வனுடன் இன்று சந்திப்பு

(நமது நிருபர்)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அழைப்பை ஏற்று சமாதான முயற்சியை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்குடன் இலங்கை வந்துள்ள நோர்வே நாட்டின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இன்று வன்னியில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழச்செல்வனை சந்திக்க உள்ளார்.**

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று இலங்கை வந்துள்ள நோர்வேயின் விசேட தூதுக்குழு சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக பிரதமருடனும் ஜனாதிபதியுடனும் பேச்சுவார்த்தை நடத்தியபின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தலைமையில் இன்று வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனையும், மற்றும விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களையும் சந்திக்கவுள்ளது.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் ஏற்கனவே திட்டமிட்டவாறு இந்தோனேசியா செல்லவேண்டியிருப்பதால், எரிக்சொல்ஹேய்மே இன்று தமிழ்ச்செல்வனை சந்திக்கவுள்ளார்.

இன்று தமிழ்ச்செல்வனை சந்திக்கும் நோர்வே தூதுக்குழு ஏற்கனவே பிரதமர், ஜனாதிபதி ஆகியோருடன் நடத்திய பேச்சுவார்த்தை தொடர்பாக அவர்களுக்கு விளக்கிக் கூறியபின் அது தொடர்பாக விடுதலைப்புலிகளின் கருத்தை அறிந்துகொண்டு உடனடியாக கொழும்புக்குத் திரும்பி அதனை ஜனாதிபதியிடம் தெரிவிக்கும்.

இன்று இடம்பெறும் சந்திப்பின் போது ஏற்கனவே முன்னைய அரசிடம் சமர்ப்பித்திருந்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்ட வரைபில் இருந்தே பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதை விடுதலைப் புலிகள் வலியுறுத்திக் கூறுவதுடன் விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் பேச்சுகள் அமைய வேண்டும் என்றும் எடுத்துக் கூறுவார்கள் என தெரிய வருகிறது. (ம)

# ஜனாதிபதி சந்திரிகாவுடன் தொண்டமான் பேச்சு

(கொழும்பு)

மலையம் கந்தப்பபொலவில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம் தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் நேற்று ஜனாதிபதியை சந்தித்துப் பேசியுள்ளார்.

பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமைக்கு தீர்வுகாண ஜனாதிபதி முன்வர வேண்டுமென தொண்டமான் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

நுவரெலியாவில் ஜனாதிபதி இல்லத்தில சந்திப்பு இடம்பெற்றது. படுகொலைச் சம்பவத்திற்கு ஜனாதிபதி வருத்தம் தெரிவித்தாக தொண்டமான் கூறினார்.

சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான முத்து சிவலிங்கம் வடிவேல் சுரேஸ், பாயிஸர் முஸ்தபா மற்றும் வி. இராதாகிருஸணன ஆகியோரும் கலந்துகொண்டனர். (ச)

# வடக்கு - கிழக்கை புனரமைக்க இந்தியாவின் உதவி அவசியம்

## "இந்து" பத்திரிகைக்கு அமைச்சர் கதிர்காமர் பேட்டி

(புதுடில்லி)

**இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மிகவும் அக்கறை கொண்டுள்ளது. இதன் காரணமாகவே மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம் பப்பதற்கு உதவுமாறு நோர்வே அரசை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கேட்டுள்ளார்.**

இவ்வாறு இந்தியாவுக்கு விஜயம் செய்த அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்துப்பத்திரிகைக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இந்துப்பத்திரிகைக்கு வழங்கிய அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

போரினால் கடுமையாகப் பாதிக்கபட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் புனர்நிர்மாணம் செய்வதற்கு இந்தியாவின் உதவியை இலங்கை எதிர்பார்க்கிறது.

இலங்கையில் போரினால் பாதிக்கபட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா உதவுவதன் மூலம் நோர்வே அனுசரணையுடன் அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையில் இடம்பெறும் சமாதான நடவடிக்கைகளில் இந்தியா தொடாபை ஏற்படுத்திக்கொள்ளும் ஒரு வழியாக இருக்கும். சமாதான நடவடிக்கைகளில் வடகிழக்கு புனரமைப்புக்கே முக்கியத்துவமளிக்கப்படும். பேச்சுக்களும் விரைவில் ஆரம்பிக்கப்படும். பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான தமது விருப்பத்தை இன்னும் ஒரு சில நாட்களில் புலிகள் உத்தியோக பு்ர்வமாக அறிவிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டவுடன் பேச்சுவார்த்தைகளைப் பற்றி, அவற்றின் வகைமுறைகள் பற்றி,



பேச்சுக்களின் கட்டமைப்புக்கள் பற்றி முதலில் கலந்துரையாடல்கள் நடாத்தப்படும். ஏனெனில் முன்னைய பேச்சுக்கள் நடைபெற்று நீண்ட நாட்களாகிவிட்டன. 2002 பெப்ரவரி முதல் அரசும் புலிகளும் போர நிறுத்தத்தை கடைப்பிடித்து வருகின்றனர். இருப்பினும் கடந்தவருடம் ஏப்ரல் முதல் பேச்சுக்கள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. இந்தியாவின் தற்போதைய அரசாங்கமோ அல்லது வேறு எந்த அரசாங்கமோ எமது கோரிக்கையை ஏற்கும் என நம்புகிறேன். இவ்வாறு தெரிவித்த கதிர்காமர் டில்லியில் இந்திய வெளியுறவு அமைச்சர் யஷ்வந் சிங்ஹாவுடனும தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஷ் மிஸ்ராவுடனும் யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்ப இராணுவ, பொருளாதார ஒத்ழைப்பு பற்றி கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ந-6)

## ஜே.வி.பி. அரசில் இணைந்திருக்கும் வரை இனப்பிரச்சினைக்குத் தீர்வே கிடையாது!

### உலக ஒத்துழைப்பு மன்றப் போஷகர் கருத்து

(கொழும்பு)

தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப்புலிகள் என்பதை ஏற்றுக்கொள்ளாத மக்கள் விடுதலை முன்னணி அங்கம வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தினால் சமாதான முயற்சிகளை ஒருபோதும் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியாது என நீதிக்கும் சமாதானத்துக்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின் போஷகர் மகா கடவெல புண்ணிய தேரர் தெரிவித்துள்ளார்.

குருநாகல். மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளும் இந்தக் காலகட்டத்தில், அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளாத மக்கள் விடுதலை முன்னணி அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதநதிர முன்னணி அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிப்பதென்பது இயலாத காரியம்.

சமாதான முயற்சிகளில் தற்போதைய அரசாங்கம் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றபோதும் அதற்கு மக்கள் விடுதலை முன்னணி மறைமுகமான எதிர்ப்புக்களைத் தெரிவித்து வருகின்றது.

ஆனால் அரசாங்கமோ அநத எதிர்ப்புக்களை எல்லாம் மூடி மறைத்துவிட்டு சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகக் காட்டி வருகின்றது.

உலக நாடுகளின் ஆதரவையும் உதவியையும் நன்மதிப்பையும் பெற்றுக் கொள்வதற்காகவே இந்த அரசாங்கம் சமாதான முயற்சியில் இறங்கியுள்ளது.

மேலும் தற்போதைய அரசாங்கம் உலக நாடுகளை ஏமாற்றி அவற்றிடம் இருந்து நிதியைப் பெற்றுக் கொள்ளுவதற்காகவும் சமாதான முயற்சியில தறபோது மிகுந்த ஈடுபாடு காட்டுகின்றது.

எது எவ்வாறாயினும் தமிழீழ விடுதலைப்புலிகளை கடுமையாக விமர்சித்து அவர்களின் இடைக் கால நிர்வாக சபைக் கோரிககையை நிராகரித்து வரும் மக்கள விடுதலை முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் வரை சமாதானம் என்பது பகல் கனவாகவே இருக்கும்.

இதேவேளை, பௌத்த மத குருமார்களை இழிவுபடுத்திவரும் மக்கள் விடுதலை முன்னணி அங்கம் வகிக்கும் அரசுக்கு நாம் ஒரு போதும் ஆதரவு அளிக்கமாட்டோம.

பதிலாக மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாடுகளைக் கண்டித்து போராட்டங்களை நடத்த உத்தேசித்துள்ளோம் என்றார்.

(ந-4,10,63)

## மணவாளக் கோல விழா

(கோப்பாய்)

கோப்பாய் வெள்ளெருவப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மணவாளக் கோல விழா எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

(ந-79)

## பதிவுகளை மேற்கொள்க

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வேலையற்றோர் பட்டதாரிகள் சங்கத்தில் இதுவரை பதிவினை மேற்கொள்ளாத அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு சங்கப் பணிமனையில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன், 1998, 1999, 2000ஆம் ஆண்டு வணிக முகாமைதுவ பட்டதாரிகளைத் தவறாது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் மேலும அறிவிக்கப்பட்டுள்ளது.

(18)

## 1987ல் கைதானவர் தப்பிவந்து முறையீடு

## அதிரடிப்படையினருக்கு எதிராக தேசிய ம.உ. ஆணைக்குழு விசாரணை

(மட்டக்களப்பு)

விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாகத் தடுத்துவைத்து துன்புறுத்தப்பட்ட நபரொருவர் செய்த முறைப்பாட்டிற்கு அமைவாக தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் உயர்மட்ட விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

1987ஆம் ஆண்டு விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்ட மட்டக்களப்பு வாசியான கனகரட்ணம் சண்முகநாதன் என்பவர் அண்மையில் படையினரது முகாம ஒன்றிலிருந்து தப்பி வந்துள்ளார்.

இவ்வாறு தப்பி வந்த அவர் தன் மீது படையினரால் புரியப்பட்ட உரிமைமீறல்கள் தொடர்பாக தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவினாடம் செய்துள்ள முறைபாடுகளுக்கு அமைவாகவே இவ் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்காக தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட உயாமட்டக் குழு ஒன்றையும் நியமித்துள்ளது.

இக்குழு முறைப்பாட்டாளர் மற்றும் விசேட அதிரடிப்படை உயர் அதிகாிகள் ஆகியோரை விசாரணை செய்து அறிக்கை ஒன்றை தேசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவினரிடம் சமர்ப்பிக்கும். இதனை அடிபபடையாகக் கொண்டு உயர்மட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ந-4,63)

## தென்மாகாண சபையை கலைக்க அமைச்சரவை முடிவு

(கொழும்பு)

பதவிக்காலம் முடிவுவடைவதற்கு முனனா் தென்மாகாண சபையைக் கலைப்பதற்கு நேற்றுமுன் தினம் கூடிய மாகாண சபையின் அமைச்சரவை தீர்மானிததுள்ளது.

மாகாண சபைத் தேர்தல்களை ஒரேநேரத்தில் நடாத்தும நோக்கிலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக தென்மாகாண சபையின் முதலமைச்சர் எச்.ரி.சிறிசேன தெரிவித்தார்

இந்த விடயம் குறித்து ஜனாதிபதியிடம் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-121)

## மீளக் குடியமர அனுமதிக்குமாறு மயிலிட்டி மக்கள் கோரிக்கை

### பிரதமர் மகிந்தவுக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டிப் பகுதியில் உள்ள இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி தமது சொந்த இடங்களில் தம்மை மீளக் குடியமர அனுமதிக்குமாறு அப்பகுதி மக்கள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்ற யுத்த அனர்த தங்களால் இடம்பெயர்ந்த அப்பகுதி மக்கள் யுத்த நிறுத்த காலத்திலும் தம் சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியவில்லை. இதனால் இங்கிருந்து இடம் பெயர்ந்த ஏராளமானோர் அடிப்படை வசதிகளற்ற அகதிமுகாம்களிலும் தற்காலிக வாழ்விடங்களிலும காலத்தைக் கழித்து வருகின்றனர்.

இந்நிலையில் மயிலிட்டிப் பகுதிகளில் உள்ள இராணுவ உயா பாதுகாப்பு வலயங்களை அகற்றி மீளக் குடியமர அனுமதிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் பல்லாயிரக்கணக்கானோரின் கையெழுத்துக்கள் அடங்கிய மகஜர் பிரதமர் மகிந்த ராஜபகஷவுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. (ந-4,63)


## புதிய அரசுடன் பேச்சு நடத்த புலிகள் தயாராகவே உள்ளனர்

### மே தினக் கூட்டத்தில் எழிலன்

தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து ஆராய்வதற்கும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தயாராகவிருக்கினறனர் என தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எஸ்.எழிலன தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற மேதின நிகழ்வல் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். வவுனியா தேசிய எழுச்சிப் பேரவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட மேதின நிகழ்வில் எழிலன் மேலும் பேசுகையில் தேர்தலில் போட்டியிட்டு ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு ஏற்பட்டாளராகச் செயற்படுமாறு நோர்வேயை அழைததன் மூலம் பேச்சுவார்த்தைக்கான சமிக்ஞையை காட்டியுள்ளது. பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்க முடியுமானால் பேசித் தா்ப்பதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் எப்போதுமே தயாராக இருக்கின்றனா என்றார்.

# மே தின நிகழ்வுக் காட்சிகளில் சில...





கிளிநொச்சியில் நடைபெற்ற நிகழ்வுகளின் ஒருபகுதி




கொழும்பில் நடைபெற்ற நிகழ்வுகளின் ஒருபகுதி





சுவிற்சர்லாந்தில் நடைபெற்ற நிகழ்வுகளின் ஒருபகுதி






நோர்வேயில் நடைபெற்ற நிகழ்வுகளின் ஒருபகுதி

# நிர்வாணப்புகைப்படங்களால்

# அரபுநாடுகள் கடும் சீற்றம்

(வாஷிங்டன்)

ஈராக்கியக் கைதிகள் நடாத்தப்படும் முறை தொடர்பாக வெளியாகியுள்ள புகைப்படங்களால் அரபுலகம் கடும் சீற்ற மடைநதுள்ளது.




ஈராக்கியக் கைதிகளை மோசமாக நடத்தியதாக நீதிமன்ற விசாரணையை எதிர்நோக்கும் 6 அமெரிக்க வீரர்கள், கைதிகளை நடத்துவதற்கான ஜெனிவா மரபுகளில் முறையான பயிற்சி பெறாதவர்கள் என அமெரிக்க இராணுவச் செய்தித் தொடர்பாளர் கூறினார்.

ஈராக்கியக் கைதிகளை மனித நேயமில்லாமல் அமெரிக்க வீர்களை மோசமாக நடத்தும் காட்சிகளைக் கொண்ட புகைப்படங்களும் வீடியோப் பதிவுகளும் வெளியாகிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. இந் நிலையில் தான் அமெரிக்க இராணுவச் செய்தித் தொடர்பாளர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுவரை நீதிமன்ற நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.




800-வது படைப்பிரிவின் கொமாணடர் பிரிகேடியர் ஜெனரல் ஜொனிஸ கர்பின்ஸ்கியும் ஏழு வீரர்களும் இது வரை பணி நீக்கம் செய்யப்பட்டுளளனர். எனினும் பணி நீக்கம் தொடர்பாகக் கிடைத்துள்ள தகவல்கள் தெளிவாகவில்லை. கர்பின்ஸ், நாடு திரும்பி இருப்பார் எனவும் தெரிகிறது. குற்றம் சாட்டப்பட்டுள்ள வீரர்கள் பலருக்கு ஈராக்கிலேயே வேறு பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்,வீரர்களின செயல் அமெரிக்கர்களின் இயல்பைப் பிரதிபலிப்பதாக இல்லை. அமெரிக்காவில் இம்மாதிரி நாங்கள் நடப்பதில்லை. இச் செயலை நான் விரும்பவில்லை. கைதிகள் நடத்தப்பட்ட முறை வெறுப்பளிக்கிறது என்றார்.

ஈராக்கியக் கைதிகள் இம்மாதிரி நடத்தப்பட்ட விவகாரம் தன்னை மிகவும் பாதித்துள்ளதாக ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனான் தெரிவித்துள்ளார். எல்லா இடங்களிலும் எல்லாச் சூழல்களிலும் சர்வதேச மனித உரிமைகள், விதிகளின் படிதான் கைதானவர்கள் நடத்தப்படவேண்டும். குற்றம் இழைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது வரவேற்கத் தக்கது எனவும் அவர் கூறியுள்ளார். இதுதொடர்பில் பிரித்தானியப் பிரதமர் ரோனி பிளேயர் கடும் சீற்றம் அடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

வெளியாகியுள்ள புகைப்படங்களில் தலை மூடப்பட்ட நிலையில் உள்ள ஒரு கைதியின் இரத்தம் கசியும் தலைக்குமேல் அமெரிக்க வீரர் ஒருவர் சிறு நீர்கழிக்கிறார். நிர்வாணம் ஆக்கப்பட்ட ஒரு கைதியோடு பெண் இராணுவச் சிப்பாய் ஒருவர் காணப்படுகிறார். இன்னுமொரு புகைப்படத்தில் நிர்வாணம் ஆக்கப்பட்ட கைதியை யு.எஸ் இராணுவ வீரர் ஒருவர் துப்பாக்கி கொண்டு மிரட்டுகிறார்.

இப்புகைப்படங்கள் அரபுலகம் எங்கும் கடும் ஆத்திரத்தையும் கொதிப்பையும் ஏற்படுத்திள்ளது. சதாம் ஹூசைனை எதற்காக வெளியேற்றினார்களோ அதையே அமெரிக்கரும் பிரித்தானியர்களும் இன்று செய்கின்றனர். இதுதானா அவர்களின் மனித உரிமையும் ஜனநாயகமும் என்று அரபுலக செய்தி ஸ்தாபனங்கள் கடுமையாகச் சாடியுள்ளன.

(யே)



ஜோர்தான் தலைநகர் அம்மானில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தும் முயற்சியில் அல்குவெய்தா தீவிரவாத அமைப்பு ஈடுபட்டதை எதிர்த்து கடந்தவியாழக்கிழமை நடைபெற்ற பேரணியில் அரசி ரானியா பங்கெடுத்தார். தோல்வியில் முடிந்த இந்தச்சதியைக் கண்டிக்கும் பேரணியில் சுமார் 20 ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

# வியட்நாமில் 200 மாணவரோடு கடலில் மூழ்கிய மீன்பிடிப் படகு

## 22பேர் மரணம் 70பேரைக் காணவில்லை

(ஹனோய்)

சுமார் 200பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற மீன்பிடிப் படகொன்று கடலில் மூழ்கியதில் 22பேர் உ்யிரிழந்ததுடன், சுமார் 70பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

மே தின விடுமுறையை உல்லாசமாகக் களிக்கச்சென்ற மாணவர்களை ஏற்றிச்சென்ற இப்படகு மீன்பிடிக்கவேயல்லாமல் பயணிகளை ஏற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் இதன் உரிமையாளர் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுமார் 12தொடக்கம் 15வயதுள்ள சிறுவர்களை ஏற்றிச்சென்ற இப்படகில் நீர் புகுந்தாகவும் பல பிள்ளைகள் செல்லிடத் தொலைபேசி மூலம் தமது பெற்றோரை உதவிக்கழைத்தாகவும் ஹொன் ஹோய்த் தீவுக்குத் திரும்பும் வழியில் இப்படகு மூழ்கிவிட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இராணுவ மற்றும் மீனவப் படகுகள் தேடுதல் நடாத்தி 111பேரை மீட்டுள்ளனர். 70பேர் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அவர்கள் உயிருடனிக்கக்கூடிய நம்பிக்கை குறைவாகவே காணப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

(யே)

# அப்பாவிகளைக்கொன்று அமெரிக்காவுக்குச் சாமரம்

## மசிடோனியாவில் நாடகம்

(ஸ்கோப்ஜே)

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஏழு பாகிஸ்தானியப் பிரஜைகளை மசிடோனியப் பொலஸார் சுட்டுக்கொன்றதோடு அவர்களைப் பயங்கரவாதிகளாகக் காடடியது ஒருநாடகம் என்று அறிவிக்கப்படுகிறது.

சர்வதேச சமூகத்தையும், குறிப்பாக அமெரிக்காவையும் கவருவதற்காகவே அப்பாவிகளான சட்ட விரோத குடியேற்ற வாசிகளான பாகிஸ்தான் பிரஜைகள் சுட்டுக் கொல்லப்பட்டு பயங்கரவாதிகளாகக் காட்டப்பட்டதாகவும் இது தொடர்பில் அரச அதிகாரிகள், பொலிஸார் மற்றும் உள்துறை அமைச்சர் ஆகியோர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளதாக உளதுறை அமைச்சின் பேச்சாளர் மிர்ஜானா கொன்ரெவ்ஸ்கா தெரிவித்தார்.

மசிடோனியாவூடாகக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு அழைத்துச் செல்லுவதற்காக இங்கு கொண்டு வரப்பட்ட பாகிஸ்தானியரைக் கொலைசெய்த குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் இவர்களுக்கு 10வருட சிறை அல்லது ஆயுள தண்டனை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(யே)

# சார்ஸ் நோயாளர் தொகை சீனாவில்ஆறாக அதிகரிப்பு

(பீஜிங்)

தொடர்ந்து சீனாவில் சார்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் தொகை மெதுவாக ஆனால் திடமாக அதிகரித்து வருகிறது.

நேற்று முன்தினம் சீனாவின் நோய்த் தடுப்புப் பிரிவில் பணியாற்றிய 35வயது மாணவர் ஒருவருக்கு இந்நோய் கண்டு பிடிக்கப்படடதுடன், இந்நோயால் பாதிக்கப்படடவர்களின் தொகை ஆறாக அதிகரித்துள்ளது.

சீனத் தலைநகர் பீஜிங்கில் நான்கு பேரும், சீனாவின் தென் பகுதி மாகாணமான அனுஹியில் இரண்டு பேரும் இந்நோயால்



பாதிக்கப்பட்டுள்ளனர் பாதிக்கப்பட்ட அனைவருமே நோய்த் தடுப்புப் பிரிவில் பணியாறியவர்களாவர்.

(யே)



ஈராக்கின் பாஸ்ரா நகரில் கம்யுனிஸ்டு கட்சியினர் கடந்த சனிக்கிழமை நடத்திய சர்வதேசத் தொழிலாளர்கள் தினக் கொண்டாட்டத்தில் தங்களது சின்னமான சுத்தி-அரிவாளை பிரமண்டமாக வடிவமைத்துள்ளனர்.

# சீனாவில்35பேர் மரணம்

(பீஜிங்)

நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 35தொழிலாளர் கொல்லப்பட்டதோடு, ஒருவர் காயமடைந்து, 13பேர் மீட்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்றுச் சீனாவின் வடபகுதியில் இடம் பெற்றது.

ஷாஸ்ஸி மாகாணத்தின் லின்பென் நகரில் இவ்விபத்து நிகழ்ந்த பொழுது சுரங்கத்தினுள் 49 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்ததாகவும்,மிகவும் பின் தங்கிய இப்பிரதேசத்தில் தொலைத் தொடர்பு வசதிகள் இன்மையால் சரியான தகவல்களைப பெறமுடியவில்லை என்றும் ஒரு அதிகாரி தெரிவித்தார்.

உலகின் ஆபத்து நிறைந்த நிலக்கரிச் சுரங்கங்கள் சீனாவிலேயே இருப்பதாகவும் கடந்த வருடத்தில் மாத்திரம் சுமார் 6,702பேர் நிலக்கரிச் சுரங்க விபத்துக்களில் கொல்லப்பட்டதாகவும் சீனப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

(யே)

# பயங்கரவாதப் பட்டியலில் இந்திய ஆயுதக்குழுக்கள்

(புதுடில்லி)

அமெரிக்காவின் பயங்கரவாதப்பட்டியலில் இந்தியாவில் இயங்கும் நான்கு ஆயுதக்குழுக்கள் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் டெல்லியில் இதுபற்றி அறிவத்தார். மாவோயிஸ்ட் கொம்யூனிஸ்ட் சென்றர் மற்றும் மக்கள் யுத்தம ஆகிய இரண்டு கம்யூனிஸ இயக்கங்களும் சர்வதேச பாபர் கல்ஸா,சர்வதேச சீக்கிய இளைஞர் ஒன்றியம் ஆகிய இரண்டு சீக்கிய இயக்கங்களும் இவற்றில் அடங்கும்.

இந்நான்கு இயக்கங்களும் அமெரிக்காவில் இயங்குவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.இதன்படி மேற்குறிப்பிடப்பட்ட இயக்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு அமெரிக்காவினுள் நுழையும் அனுமதி மறுக்கப்படுவதோடு, அங்கிருந்து அவர்கள் வெளியேற்றப்படக் கூடும் என்றும் தெரிகிறது.

(யே)

# சவூதி அரேபியத் தாக்குதலில் ஒன்பது பேர் உயிரிழந்தனர்

(ரியாட்)

சவூதி அரேபியாவிலுள்ள சுவிச்சர்லாந்துத் தொழில் நிறுவனமொன்றுக்குள் நான்கு தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் தீவிரவாதிகள் உட்பட 9பேர் உயிரிழந்தனர்.

சவூதி அரேபியாவில் தேடப்படும் 26பயங்கரவாதிகளின் பட்டியலில் உள்ளவர்கள் என்று கருதப்படும் இந்நால்வரும் தாக்குதல் நடத்தப்பட்ட நிறுவனத்திலேயே பணிபுரிபவர்கள் என்றும், அல்குவெய்டா இயக்கத்திற்கும் இவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும் கருதப்படுகிறது.

இறந்தவர்களில் இரண்டு அமெரிக்க பிரஜைகளும், இரண்டு பிரித்தானியப் பிரஜைகளும், ஒரு அவுஸ்திரேலியரும், ஒருசவுதி பொலிஸ் கான்ஸ்டபிளும் அடங்குவர்.

தாக்குதல் நடத்தியவர்களில் இருவர் குண்டுகளை வெடிக்க வைத்து தமது உயிரை மாய்த்துக் கொண்டனர். மற்ற இருவரும் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

(யே)

## வடக்கு-கிழக்கில் உறுதி வழங்க

# முத்திரைக் கட்டணம் அறவிடுவது சரியானதா?

சண்முகலிங்கம் சிவரூபன
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்

**1982**ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் படி இலங்கையில் நிறைவேற்றப்படும் எந்தவொரு ஆவணத்திற்கும் முத்திரைவரி செலுத்தப்படவேண்டும் எனக் குறிப்பிடுகிறது. அதே போல் 1907 ஆம் ஆண்டில் 1ஆம் இலக்க நொத்தாரிசுக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 31(6) உரிய முத்திரைவரி செலுத்தப்படாமல் நொத்தாரிஸ்மார் எந்தவொரு ஆவணத்தையும் நிறைவேற்றக் கூடாது எனக் குறிப்பிடுகின்றது. மேற்படி சட்டங்களும் அவற்றுக்கான பின்னைய திருத்தச் சட்டங்களும் உறுதிகளுக்குரிய முத்திரைவரியை வலியுறுத்தி வந்தன.

ஆனால் 2002 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டம் 01.05.2002 ஆம் திகதியிலிருந்து மேற்படி சட்டங்களின் பிரகாரம் மத்திய அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்டு வந்த முத்திரைவரியை நீக்கியிருந்தது. ஆனால் இலங்கையின் தற்போது வலுவில் உள்ள 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்புக்குக் கொண்டுவரப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 13வது திருத்தச் சட்டம் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் விரும்பினால் முத்திரைவரியை அறவிட சட்டத்தைக் கொண்டு வரமுடியும் எனக் குறிப்பிட்டதோடு தேவையற்று செலுத்தப்பட்ட முத்திரைவரியை மீளப்பெறவும் ஏற்பாடு செய்திருந்தது. அத்தோடு திறைசேரிச் சட்டத்தின் பிரகாரம் திறைசேரிக்கு முத்திரைவரிகள் சென்று உரிய படி கணக்கிடப்பட்டு பணம் பகிர்ந்தளிக்கப்படுவதால் திறைசேரிக்கு உரியபடி விண்ணப்பம் செய்து தேவையற்று அல்லது தேவைக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட முத்திரைவரியை மீளப்பெறும் நடைமுறையும் தற்போதும் இருந்து வருகிறது.

மேற்படி 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம் மத்திய அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்டு வந்த முத்திரைவரியை நீக்குவதாலும் வடக்குக் கிழக்கு மாகாணசபை முத்திரைவரி தொடர்பான சட்டத்தை உருவாக்காததாலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் இல:SD/NE/ 01 திகதி 17.10.2002 கடிதப் பிரகாரம் வடக்குக் கிழக்கில் செய்யப்படும் ஆதனங்களின் அதாவது வடக்குக் கிழக்கிலுள்ள ஆதனங்களின் கைமாற்றத்திற்கு முத்திரைவரி அறவிடுவதற்கு சட்ட ஏது இல்லையென்றும் எனவே வடக்குக் கிழக்கில் மாகாண சபை அதன் நியதிக்கமைவாக சட்டம் உருவாக்கி முத்திரைவரி அறவிடும் வரை முத்திரைவரி செலுத்தப்படாத வடக்குக் கிழக்கிலுள்ள ஆதனங்களின் கைமாற்று ஆவணங்களுக்கு முத்திரைவரி செலுத்தப்படாவிட்டாலும் பதிய மறுக்கவேண்டாம் என பதிவாளர் நாயகம் வடக்குக் கிழக்கிலுள்ள காணிப்பதிவாளர்களுக்கு 24.02.2003 ஆம் திகதிய N.P. 10/30/132/2002 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

எனவே 01.05.2002 இல் இருந்து வடக்குக் கிழக்கிலுள்ள காணிக்கை மாற்றங்களுக்கான உறுதிகளுக்கு முத்திரைவரி செலுத்தாமல் ஒரு பகுதி நொத்தாரிஸ்மார் மேற்படி சட்டங்கள், சுற்றறிக்கைகள் பிரகாரம் உறுதியை எழுதுகின்றனர். அவர்கள் அதற்கு ஆதரவாக மேற்படி கருத்துக்களை முன்வைக்கின்றனர். ஆனால் இன்னொரு சாரார் அதாவது நொத்தாரிஸ்மார் முத்திரைவரி செலுத்தி இன்றும் உறுதியை அத்தாட்சிப்படுத்தி பதிவுக்கு காணிப்பதிவகத்திற்கு சமர்ப்பிக்கின்றனர். அவர்களின் கருத்துப்படி வடக்குக் கிழக்கில் மாகாண சபை இயங்காது அது ஆளுநரின் ஆட்சியிலுள்ளது. மாகாணசபையால் மட்டுமே சட்டம் உருவாக்க முடியும் ஆளுநரால் உருவாக்க முடியாது. அவருக்கு அதிகார மில்லை. ஏனைய மாகாணசபைகள் மேற்படி 2002 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச்சட்டம் முத்திரைவரியை நீக்கிய சில நாட்களிலேயே முத்திரைவரியை அறவிட சட்டம் இயற்றி அறவிட்டும் வருகின்றன. பல பழைய வீதப்படியே முத்திரைவரியை அறவிட்டு வருகின்றன.

எனவே வடக்குக் கிழக்கில் மட்டும் முத்திரை அறவிடாதிருப்பதா? எப்படி ஏனைய மாகாணத்திலிருந்து வடக்குக் கிழக்கிற்கு மட்டும் விடுபாட்டுரிமை ஏற்படும்? அரசியல் யாப்பின் படி அவ்வாறு ஒவ்வொரு மாகாண சபைக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பதால் இது நியாயமற்றது என வாதாடுகின்றனர். இது தொடர்பில் முத்திரைவரியை நீக்கி 01.05.2002 இல் அமுலுக்கு வந்த சட்டத்தை அடிப்படையாக வைத்து கொழும்பில் உள்ள நொத்தாரிஸ் ஒருவர் முத்திரைவரி செலுத்தாது உறுதியை அத்தாட்சிப்படுத்தி யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்திற்கு அனுப்பியுள்ளார். அவ் உறுதி முத்திரைவரி செலுத்தப்படவில்லை என்ற அடிப்படையில் காணிப் பதிவாளர் பதிய மறுக்கவே அவர் யாழ்ப்பாணம் காணிப்பதிவாளருக்கு எதிராக இலங்கை மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். இவ் வழக்கில் எதிராளிகளாகக் காட்டப்பட்ட பதிவாளர் நாயகம் உடனடியாக யாழ்ப்பாணம் காணிப்பதிவாளருக்கு மேற்படி பதிய மறுக்கப்பட்ட உறுதியை பதியுமாறு கூறியதன் பிரகாரம் மேற்படி வழக்கு தீர்ப்பு எதுவுமின்றி சுமுகமாக இரு பகுதி யாரும் இணங்கி வழக்கு மூடப்பட்டது. எனவே முத்திரைவரி அறவிடத்தேவையில்லை என்று எந்தவொரு அதிகாரமுள்ள தீர்ப்பும் வந்ததாக தகவல் இல்லை. எனவே வடக்குக் கிழக்கிலும் முத்திரைவரி செலுத்தப்படவேண்டும் என்கின்றனர் அவர்கள்.

அத்துடன், 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்புக்குக் கொண்டு வரப்பட்ட 13வது திருத்தச் சட்டம் 9வது அட்டவணை List - 01இல் 36 :6இல் மாகாணசபைக்கு ஆதன கைமாற்றம் சம்பந்தமாக முத்திரைவரி அறவிட சட்டம் இயற்றும் அதிகாரத்தை மாகாணசபை நிரல் என்ற அடிப்படையில் பூரண அதிகாரம் வழங்குகின்றது. இது 13வது திருத்தச் சட்ட உறுப்புரை 154 G (1) இல் வழங்கப்பட்டது. அத்துடன் பாராளுமன்றம் மேற்படி மாகாணசபை உருவாக்கும் மாகாண சபை நிரல் தொடர்பான சட்டத்தை மாற்றும், நீக்கும் சட்டத்தை உருவாக்க மட்டுப்பாடுகளை உறுப்புரை 154 G (2),(3) இல் விதிக்கிறது. அதாவது பாராளுமன்றம் உருவாக்கும் மாகாணசபை நிரல் தொடர்பான சட்டத்தை எம் மாகாண சபை அங்கீகரிக்க வில்லையோ அதற்கு பிரயோகிக்க முடியாது.

அத்துடன், அரசியல் யாப்பு உறுப்புரை 154 G (01) மாகாண சபைகள் இலங்கையில் 1978ஆம் ஆண்டின் அரசியல் யாப்புக்கு அமைவாக மாகாணசபை நிரல் தொடர்பில் எந்த சட்டத்தையும் ஆக்கும் பூரண அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அரசியல் யாப்பின் 75 வது உறுப்புரை பாராளுமன்றம் பின்னோக்கி ஆளும் (Retros pectiveeffect) சட்டத்தை உருவாக்கும் அதிகாரத்தை அளிக்கின்றது. பின்னோக்கி ஆளும் சட்டம் என்பது இன்று ஒரு திகதியில் உருவாக்கப்படும். சட்டமானது ஏற்கனவே முன்னருள்ள ஒரு திகதியிலிருந்து அமுலுக்கு வரும் என்பதாகும். இதுபற்றி இயற்றப்படும் சட்டத்தில் தெளிவாக கூறப்பட்டிருக்கும் இப் பின்னோக்கி ஆளும் சட்டத்தை உருவாக்கும் அதிகாரம் பாராளுமன்றத்தைப் போல் மாகாண சபைகளுக்கும் உண்டா என்பதில் இது தொடர்பில் சட்ட அறிஞர்கள் மேற்படி அரசியல் யாப்பின் உறுப்புரை 154G(01) இல் அரசியல் யாப்புக்கு முரணாக இல்லாதவாறு மாகாண சபைகள் மாகாணசபை நிரலிலுள்ள விடயங்கள் தொடர்பில் சடடமாக்க பூரண அதிகாரத்தை வழங்குகிறது. பாராளுமன்றமும் மேற்படி அரசியல் யாப்பு மூலம் உருவாக்கப்பட்டதே. எனவே பாராளுமன்றத்திற்கு உறுப்புரை 75 மூலம் வழங்கப்பட்டுள்ள பின்னோக்கி ஆளும் சட்டம் உருவாக்கும் அதிகாரம் மாகாணசபைகளுக்கும் உண்டு என்கின்றனர். இதற்கு அத்தாட்சியாக மாகாண சபைகள், மாகாணசபை நிரலிலுள்ள விடயங்கள் தொடர்பல் சட்டங்களை உருவாக்க அளிக்கப்பட்டுள்ள பூரண அதிகாரத்தைப் பாராளுமன்றம் கட்டுப்படுத்தும் சட்டங்களை உருவாக்க முடியாது. உறுப்புரை 154 G (2), (3) பாரிய மட்டுப்பாடுகளை விதிக்கின்றது. எனவே மேற்படி உறுப்புரை 154G (01) இன் பிரகாரம் மாகாணசபைகள் மாகாணசபை நிரலிலுள்ள விடயமான ஆதனக் கைமாற்றத்திற்கு முத்திரைவரி அறவிடுவதற்கு பின்னோககி ஆளும் சட்டத்தை உருவாக்க முடியும் என்கின்றனர்.

எனவே தற்போது வடக்குக் கிழக்கில் மாகாணசபை இல்லாவிட்டாலும் பின்னர் தேர்தல் மூலம் மாகாணசபை உருவானால் முத்திரைவரி தொடர்பில் பின்னோக்கி ஆளும் சட்டத்தை உருவாக்கினால் பழைய திகதியில் இருந்து முத்திரைவரி செலுத்தவேண்டியதாகிவிடும். எனினும் உறுப்புரை 154 H(1) மாகாணசபை உருவாக்கும் சட்டத்தை ஆளுநரின் அங்கீகாரத்திற்கு கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் என்கிறது. உறுப்புரை 154 H(2) அவ்வாறு ஆளுநர் முன் சமர்ப்பிக்கப்படும் சட்டத்தை ஆளுநர் தான் குறிப்பிடும் ஏற்பாடுகளை மீள்பார்வை செய்யுமாறு தேவைப்படுத்தலாம். உறுப்புரை 154 H (3) மாகாணசபை ஆளுநர் மீள்பார்வைக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஏற்பாடுகளை திருத்தலாம் அல்லது அப்படியே மீண்டும் ஆளுநரிடம் சமர்ப்பிக்கலாம். திருத்தாது அப்படியே மீளவும் சமர்ப்பிக்கப்படின் ஆளுநர் உறுப்புரை 154 H(4) இன் பிரகாரம் ஜனாதிபதி மூலமாக அச் சட்டத்தை மீளாய்வு செய்யுமாறு இலங்கை உயர்நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கலாம். இதனை ஜனாதிபதி ஒரு மாதத்திற்குள் செய்ய வேண்டும் என மட்டுப்படுத்துகிறது. அது அரசியல் யாப்புக்கு முரணாக உள்ளதா என்பதை மட்டும் தீர்மானித்து தீர்ப்பளித்து அவ்வாறு இல்லாவிடில் அச்சட்டத்தை அங்கீகரிக்குமாறு ஆளுநரைப் பணிக்கும். அதன் பின் அது மாகாணசபையின் சட்டமாக அமுலுக்கு வரும. இவ்வாறு மட்டுப்பாடு இருப்பினும் மாகாணசபை பின்னோக்கி ஆளும் சட்டத்தை மாகாணசபை நிரல் தொடர்பில் உருவாக்கலாம் என்பதில் சட்ட சமூகத்தில் இரு வேறு கருத்துக்கள் இருக்கின்றது.

எனவே, இவ்வாறு வடக்குக் கிழக்கு மாகாணசபை உருவாகி அது முத்திரைவரி தொடர்பில் பினனோக்கி ஆளும் சட்டத்தை உருவாக்கினால் உறுதிகளில் செலுத்தப்படாத முத்திரைவரி களுக்கு யார் பொறுப்பு சொல்லவேண்டும்?

இது தொடர்பில் 1907 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நொத்தாரிஸ் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 31 (06) முத்திரைவரி செலுத்தப்படாது. நொத்தாரிஸ் ஒரு ஆவணத்தை அத்தாட்சிப்படுத்தக் கூடாது என்கின்றது. அத்துடன் இச்சட்டத்தின் பிரிவு 31(26)(**a**) அத்தாட்சிப்படுத்திய உறுதிகளின் இணைப் பிரதியை ஒரு மாதத்திற்குரியதை அடுத்தமாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் காணிப்பதிவாளரிடம் பட்டியலிட்டு சமர்ப்பிக்கவேண்டும் என்கிறது. ஒரு உறுதியும் அம் மாதத்தில் எழுதப்படாவிடின் **Ni/ list** சமர்ப்பிக்கவேண்டும் என்கிறது பிரிவு 31(26)(**b**) மேற்போர்ந்த பிரிவுகள் நொத்தாரிசால் மீறப்படுமிடத்து நொத்தாரிஸ் கட்டளைச் சட்ட பிரிவு 34(1) நீதவான் நீதிமன்றின் முன் குறித்த நொத்தாரிஸ நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார். அத்துடன் குடியியல் பொறுப்புக்கும் ஆளாவார் என்கிறது. அத்துடன் பிரிவு 36(1) இன் பிரகாரம் குறித்த நொத்தாரிஸை பதவியிலிருந்து நீக்க அமைச்சர் விதியை ஆக்கி பாராளுமன்ற அங்கீகாரத்தை பெற்று கசற்றில் வெளியிட்டு அதன் மூலம் நொத்தாரிஸ் பதவியை வறிதாக்கலாம்.

இங்கு தொந்தாரிஸ் கட்டளைச் சட்டப் பிரிவு 34(1) இன் படி குடியியல் பொறுப்பு என்பது குறித்த முத்திரை வரியை நொத்தாரிசை செலுத்துமாறு வேண்டப்படலாம். இவை நொத்தாரிசுக்கு அபகீர்த்தி, பணச் செலவு, வீண்சுமைகள், நிம்மதியின்மை என்பவற்றை ஏற்படுத்தும். எனவே தான் சில நொத்தாரிஸ்மார் இன்றும் முத்திரைவரியை அறவிட்டுச் செலுத்துகின்றனர் எனலாம்.

இங்கு முத்திரைவரி அறவிடாத நொத்தாரிஸ்மார் உறுதி எழுதுபவர்களிடம் இருந்து வாக்குறுதிக் கடிதம் ஒன்றைப் பெறுகின்றனர். இதன் தன்மையை நோக்கினால் அதாவது முத்திரைவரி தேவைப்படுமிடத்து அதனை செலுத்துவதற்கு நாம் பொறுப்பு என சத்தியக் கடிதம் உறுதி நிறைவேற்றுபவர்கள் கையொப்பமிட்டு வழங்குகின்றனர். இதன் வலுவை ஆராயின் முத்திரைவரி செலுத்தவேண்டும் என சட்டம் வந்தால் உறுதி நிறைவேற்றுபவர்கள் உரிய முத்திரைவரியை நொத்தாரிஸ் கேட்டும் கொடுக்காவிட்டால் குறித்த நொத்தாரிஸ் அச்சத்திய அல்லது வாக்குறுதிக் கடிதத்தைக் கொண்டு சென்று நீதிமன்றில் வழக்கிட்டு மட்டுமே உறுதிநிறைவேற்றியவர்களிடம் இருந்து அப்பணத்தை அறவிடமுடியும். இங்கு நூற்றுக்கணக்கான உறுதிக்ளை எழுதும் நொத்தாரிஸ்மார் நூற்றுக்கணக்கான வழக்குகளை முத்திரைவரி செலுத்தாத உறுதி நிறைவேற்றியவர்களுக்கு எதிராகத் தொடுக்க வேண்டும். இது வழக்குச் செலவு, காலவிரையம் என்பவற்றை ஏற்படுத்தும் சிலவேளைகளில் முத்திரைக் கட்டணம் குறைந்த பெறுமதியாக இருக்கும்; வழக்குச் செலவு கூடியதாக இருக்கும். வழக்குப் போடாவிட்டாலும் நொத்தாரிசே குறித்த முத்திரை வரியை செலுத்த வேண்டிய பொறுபபு வரலாம் இங்கே ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது முத்திரைவரி அமுலில் இருந்து முத்திரைவரி செலுத்தப்படாத ஆவணங்கள் சட்டப்படி செல்லுபடியற்றவை. இவ் ஆவணம் சட்டபூர்வ உரிமையை நிலைநாட்டப் பயன்படுத்த முடியாது என்பதை பொதுமக்கள் பலர் அறியமாட்டார்கள்.

மேலும் மேலே கூறப்பட்ட விடயம் அதாவது பின்நோக்கி ஆளும் சட்டத்தை உருவாக்க பாராளுமன்றத்திற்கு அரசியல் யாப்பின் உறுப்புரை 75இன் பிரகாரம் உள்ள நியாயாதிக்கத்தை மாகாணசபைகளுககும் விரிவாக்க முடியுமா என்பதாகும்.இங்கு உறுப்புரை 76 பாராளுமன்றம் சில விதிவிலக்குகள் தவிர சட்டமாக்கும் தனது தத்துவத்தை கையளிக்கமுடியாது. எனவே பாராளுமன்றத்துக்கு மட்டுமென உள்ள பின்நோக்கி ஆளும் சட்டம உருவாக்கும் உரிமையை மாகாண சபைகளும் மாகாணசபை நிரல் தொடர்பில் சட்டமாக்கும் தத்துவத்திற்கு விரிவாக்கம் செய்யலாமா என்ற வினா எழுகின்றது. இது மற்றொரு சாராரின் கருத்தாகும். இது தொடர்பில் உயர் நீதிமன்றத்திற்கு இவ்விடயம் எடுத்துச் செல்லப்பட்டால் மட்டுமே அதாவது உயர் நீதிமன்றத்தால் மட்டுமே தீர்மானிக்கப்படவேண்டிய விடயமாகும். ஏனெனில் இது அரசியல் யாப்புடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். இது வடக்குக் கிழக்கில் மாகாணசபை உருவாகி அது முத்திரைவரி தொடர்பில் பின்னோக்கி ஆளும் சட்டம் உருவாக்கி அது உறுப்புரை 154 H(4) இன் பிரகாரம் ஆளுநர் ஜனாதிபதி மூலமாக உயர்நீதிமன்றுக்கு மீளாய்வுக்கு அனுப்பினால் அல்லது இச் சட்டத்தை சாதாரண குடிமகன் உயர் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தினால் மட்டுமே இதற்கு தீர்ப்புக் கிடைக்கும் முடிவு எட்டப்படும்.

இங்கு வடக்குக் கிழக்கிற்கு மட்டும் முத்திரைவரி அறவிடப்படாதிருப்பது மாகாணசபையை நிர்வகிக்கும் ஆளுநருக்கு அதாவது வடக்குக் கிழக்கு மாகாண நிர்வாகத்துக்கு பெரும் நிதி இழப்பை ஏற்படுத்தும். அத்துடன் ஏனைய மாகாணசபை முத்திரைவரியை அறவிடத்தமக்கு மட்டும் அறவிடமுடியாமை நியாயமற்றது என புதிதாக உருவாகும் மாகாண சபை வாதிடலாம். அதற்கு சார்பாகத் தீர்ப்பு வெளிவரின் அதாவது பின்னோக்கி ஆளும் சட்டம் முத்திரைவரி தொடர்பில் மாகாணசபை உருவாக்கலாம் எனின் நொத்தாரிஸ்மார் பெரும் பிரச்சினைக்கு உள்ளாவார்கள் என்பது தெளிவு.

அத்துடன் தற்போது வடக்குக் கிழக்கிலுள்ள காணி தொடர்பில் உறுதிநிறைவேற்றும் நொத்தாரிஸ்மாரில் சிலர் முத்திரைக்கும் பணம அறவிட்டு விட்டு அதனை ஒட்டாது உறுதியைப் பதிவுக்கு அனுப்புகின்றனர். பிறகு தேவையெனில் ஒட்டுவோம் என்ற அடிப்படையில் இது நடைபெறுகிறது. இது பொது மக்களுக்கு தேவையற்ற சந்தேகத்தை எழுப்புகிறது. உறுதியில் முத்திரைவரி செலுத்தப்பட்டதா என்பதை உறுதியின் பின்பக்கத்தில் நொத்தாரிசின் அத்தாட்சிப் படுத்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் இதனை வாசித்து அறிந்துகொள்ளலாம். சிலர் தாம் முத்திரை யொட்டி எழுதுவதில்லை என குறிப்பிட்டுவிட்டு கூடிய கட்டணத்தை அறவிடுகின்றனர். இங்கு நொத்தாரிஸ்மார் எவ்வளவு கட்டணத்தை

( 08ஆம் பக்கம் பார்க்க)

# ஜப்பானின் ஒஸாக்காவில் றொபோ உதைபந்துச் சுற்றுப்போட்டி



ஜப்பானின் மேற்குப பிரதேச மான ஒஸாக்காவில் பல்வேறு நிறு வனங்கள் கலந்துகொள்ளும் 'றொபோ' உதைபந்தாட் டச் சுற்றுப்போட்டி ஒன்று நடைபெறுகிறது.

மனித செயற்பாடுகளை உள்வாங்கியிருக்கும் இந்த இயந்திர மனிதர் களின் உதைபந்தாட்டத தைக் காணப பல்லாயிரக் கணக்கான சிறுவர்களும் பொதுமககளும் திரண் டுள்ளதாக அறிவிக்கப் படுகிறது.

சோனி, ஹொண்டா, யமஹா, அனா, கசியோ போன்ற பிரபல மின்னி யல் சாதன உற்பத்தி நிறு வனங்கள் தமது அணி களை இப் போட்டியில் பற்குபெற அனுப்பி வைத்துள் ளன.

நொக் அவுட் முறையிலான இப் போட்டிகளின் இறுதியாட்டம் வருகிற ஞாயிற்றுக்கிழமை இடம் பெறும் என்று அறிவிக்கப்படுகி றது. (யே)

## பரிசளிப்பு

(பொன்னாலை)

பச்சிலைப்பள்ளி பிரதேச செய லகத்தினால் கழகங்களுக்கிடையே நடாத்தப்பட்டுவரும் தடகள விளை யாட்டுப் போட்டியின் இறுதிப் போட் டியும் பரிசில் வழங்கல் நிகழ்வும் இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தின ராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் கலந்து கொள்ளவுள்ளார். (யே-49)



**சர்வதேச மகளிர் ஹொக்கிப் போட்டியின் டெஸ்ட் தொடர்கள் இப் பொழுது நடைபெற்று வருகின்றது. இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் தொடரின் போது கடும் மழை பெய்தது. இதன் காரணமாக மைதானம் வெள்ளத்தில் மூழ்கியது. மழையின் பிற்பாடு ஆரம்பிக்கப்பட்ட போட்டியில் பந்தை தனது கட்டுப்பாட்டினுள் கொண்டுவர முயற்சிசெய் யும் அவுஸ்திரேலிய வீராங்கனை சாரா ரெய்லர் மைதானத்தில் சறுக்கி விழுந்து தண்ணீரில் நீச்சலடிப்பதைப் படத்தில் காணலாம்.**

# சிம்பாப்வேயின 'ஏ' அணியில் முன்னாள் வெள்ளை வீரர்கள்

இலங்கை அணிக்கும் சிம்பாப்வே 'ஏ' அணிக்கும் இடையிலான 3நாளா பயிற்சிப் போட்டி நேற்றுமுன்தினம் ஹராரே விளையாட்டரங்கில் நடை பெற்றது.

இவ்விரு அணிகளுக்கும இடை யிலான ஒருநாள் போட்டி முடிவுற்ற நிலையில், முதலாவது டெஸ்ட் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் இடம்பெறும் பயிற்சிப் போட்டியா கவே இது அமைந்துள்ளது.

இந்தப் போட்டியில் ஏற்கனவே தேசிய அணியில் இருந்து நீக்கப் பட்ட முக்கிய 5வீரர்கள் இடம் பெற்றிருந்தமை குறிப் பிடத்தக் கது. ஏற்கனவே தேசிய அணி சார்பாக அணித்தலைவராக இருந்த ஹீத்ஸ்ரீக அணியில் இருந்து நீக்கப்பட்ட பின்னர் மீண்டும் சிம் பாப்வே 'ஏ' அணியில் இணைத் துக்கொள்ளப்பட்டுள்ளார்.

இந்தப் போட்டியில் நேற்றைய ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத தாடிய சிம்பாப்வே 'ஏ' அணி சகல விக்கெற்றுக்களையும் இழந்து முதல் இன்னிங்ஸில் 294ஓட்டங் களைப் பெற்றது. இதில் சிகம் பொரா 63ஓட்டங்களையும், ஷோன ஏர்வின் 75ஓட்டங்களையும் பெற்ற னர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக உப்புல்சந்தன 90ஓட் டங்களுக்கு 3விக்கெற்றுக்களை யும், பெர்னாண்டோ, மஹ்ரூப் ஹேரத் ஆகியோர் தலா 2விக் கெற்றினையும் வீழ்த்தினார்கள்.

பதிலளித்துத் தனது முதல் இனனிங்ஸிற்காக இலங்கை அணி முதல்நாள் ஆட்டநேர முடிவின் போது 2விக்கெற்றுக்களை இழந்து 66ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான இயன்டானியல் ஓட்டமெதுவும் பெறாமலும், சனத் ஜெயசூரிய 11 ஓட்டங்களைப் பெற்ற வேளையி லும் ஆட்டமிழந்தனர். திலான் சமர வீர ஆட்டமிழக்காது 12ஓட்டங்க ளையும் குமார்சங்ககார ஆட்ட மிழககாது 41 ஓட்டங்களையும் பெற் றுள்ளனர். (யே-121)

# ரோம் நகரம் எரிந்தது

ரோம் நகரிலுள்ள ஐந்து நட் சத்திர ஹொட்டேல் ஒன்று தீப்



பற்றி எரிந்ததில் மூவர் கொல் லப்பட்டனர். அங்கு தங்கியிருந்த பிரபல ரெனிஸ் வீரர்கள் காப் பாற்றப்பட்டனர்.

ரோம் மாஸ்டர்ஸ் கிண்ணத திற்கான டெனிஸ் தொடரில் விளை யாட வந்திருந்த உலகின் நம்பர் 2ஸ்தானத்திலுள்ள அன்டி றொ டிக் உள்ளிட்ட பல வீரர்கள் பாது காப்பாக வெளியேற்றப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அதிகாலையில் திடீரென ஏற் பட்ட இவ் விபத்து தொடர்பில் இரண்டு அமெரிக்கப் பிரஜைகள் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். (யே)

# நடுத்தரக் குத்துச்சண்டை பட்டத்திற்கு ரக்கலூ போட்டி



நெடுநாட்களாக நிரப்பப் படாமலிருக்கும் நடுத்தர குத் துச்சண்டைப் பட்டத்திற்கான போட்டியில் கானா நாட்டின் ஓஸி டுரானை பிரபல வீரர் ரக்கலூ எதிர்த்துச் சண்டையிடுவார்.


இம்மாதம் 13ஆம் திகதி நடைபெறவிருக்கும் இச்சண் டையைவிட, இதற்குப் பின்னர் வெயின் அலெக்ஸாண்டருடன் இவர் நடாத்தவிருக்கும் சண்டையே மிகவும் பரபரப பாக எதிர்பார்க்கப்படுகிறது.

இவருடைய பரம எதிரியாகக் கருதப்படும் அலெக்ஸாண்டருடன் இவர் அண்மையில் மோதவிருந்தார். ஆயினும் முழங்காலில் ஏற் பட்ட காயம் காரணமாக அலெக்ஸாண்டர் போட்டியிலிருந்து தற் காலிகமாக விலகினார்.

30 வயதான அலெக்ஸாண்டர் ஐரோப்பிய மற்றும் பிரித்தானியக் குதுதுச்சண்டைப் பட்டத்தை வென்றவராவார். (யே)

# அமெரிக்க மெய்வல்லுநர் இருவருக்குத் தடை

தடைசெய்யப்பட்ட போதை மருந்துகளைப பாவித்தார்கள்



என்ற குற்றச்சாட்டின் பேரில் அமெரிக்க மெய்வல்லுநர்கள் இரு வருக்கு அந்நாட்டு மெய்வல்லுநர் சங்கம் போட்டிகளில் பங்கெடுக்கத் தடைவிதித்துள்ளது.

மெலிசா பிறைஸ் மற்றும் மக் ஈவன் ஆகிய இருவருக்குமே இத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் நடுப்பகுதியில் இருந்து ஆரம்பமாகும் இத்தடை இரண்டு வருடங்களுக்கு நீடிக்கும் என்றும், கெவின் ரோத் மற்றும் றெஜினா ஜேக்கப்ஸ் ஆகிய மேலும் இரு வீரர்களும் இப் பிரச்சினையில் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் அவர் கள் தொடர்பிலான முடிவுகள் வெகு விரைவில் எடுக்கப்படும் என்றும் ரெரிமேடன் தெரிவித் தார். (யே)

# யூபாக கிண்ணப் போட்டிகளில் லீசெஷ்டயர் அணி பின்நிலை

நடைபெற்றுவரும் யூபாக் கிண் ணப்போட்டிகளில் பல அணிகள



முன்னோக்கிச் சென்றுகொண்டிருக் கும் அதேவேளை, ஒரு காலததில் மிகப் பிரபலமடைந்திருந்த லீசெஷ் டயர் அணி பின்னடைவுகளை எதிர்நோக்குகிறது.

சார்ல்டன் அணியுடன் 2-2என்ற அடிப்படையில் சமநிலையிலும் மஞ்செஸ்டர் யுனைட்டட்டிடம்1-0 என் னும அடிப்படையல்தோல்வியடைநத மையால் பிறீமியர் லீக்கின் குழு நிலையில் "ஏ" பிரிவிலிருந்த இவ் அணி "பி" பிரிவுக்கு மாற்றப்பட் டுள்ளது.

இதனால் இவ்வணியிலுள்ள சிறந்த வீரர்கள் வேறு அணிக ளுக்குத் தாவ நேரிடும் என்றும் அணி மேலும் பல பின்னடைவு களை எதிர்நோக்கலாம் என்றும் பயிற்றுவிப்பாளரான அடம்ஸ் தெரி வித்தார். (யே)



**ஸ்பெயின் நாட்டில் இடம்பெறவுள்ள மோட்டோ ஜீ பி தொடருக்காக இத்தாலியின் வலன்ரீனோ றோஸி யமஹா மோட்டார் சைக்கிளில் பயிற் சிகளில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.**

# மே.இ.தீவுகளுக்கு வெற்றி தொடர் சமநிலையில் முடிவு

இங்கிலாந்து அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையிலான சென் லூசியாவில் இடம் பெற்ற ஐந்தாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 5விக்கெற் றுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் இறுதிவரை சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி போட்டியில்



வெற்றிபெற்று தொடரை சமப்படுத்தியுள்ளது. ஏற்கனவே நடைபெற்ற நான்கு போட்டிகளில் மூன்று போட்டிகள் மழையினால தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், முதல் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50ஓவர்கள் முடிவில் 8விக்கெற் இழப்பிற்கு 281ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மார்க்கஸ் ரெஸ் கோதிக் 130ஓட்டங்களையும், அன்ரூ பிளின்ரோவ் 59ஓட்டங்களையும், ஹெய்ற் 24ஓட்டங் களையும் பெற்றார்கள்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பில் பிறைவு 57 ஓட்டங்களுக்கு 2விக்கெற்றுக்களையும் பிரைற்சா 58ஓட்டங்களுக்கு 2விக்கெற்றுக்களையும் வீழ்த்தினா.

பதிலளித்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி ராம்நரேஷ் சர்வான் மற்றும் பெவன்ஸ்மித் ஆகியோரின் சிறப்பான துடுப்பாடடத்தின் மூலம் 5விக்கெற்றுக்களை இழந்து 48ஓவர்களில் 284ஓட்டங்களைப் பெற்று போட்டியில் வெற்றியீட்டியது.

இவ் அணி சார்பில் ராம்நரேஷ் சர்வான் ஆட்டமிழக்காது 73ஓட்டங்களையும் பெவன்ஸ்மித் 27 பந்துகளை எதிர்கொண்டு 6சிக்சாகள் அடங்கலாக 44ஓட்டங்களைப் பெற்றார். பிறையன்லாரா 37ஓட்டங்களையும் சிவ்நாரின் சந்தர்ப்போல் 40ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். (யே-121)

# மக்களவைத் தேர்தல் களம்

தேர்தல் களம் பற்றிய இன்றைய சிறப்புச் செய்தித் தொகுதி வரிசையில் பாண்டிச்சேரி, சிதம்பரம், நாகபட்டினம், பெரம்பூர் ஆகிய நான்கு மக்களவைத் தொகுதிகள் இடம்பெறுகின்றன.

பாண்டிச்சேரியின், ஒரே மக்களவைத் தொகுதியில் 21 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். இவர்களில் 14 பேர் சுயேச்சைகள். பா.ஜ.கட்சியின் தேசியச் செயலர் லலிதா குமாரமங்கலம் மற்றும் பா.ம.கவின் பேராசிரியர் ராமதாஸ் ஆகிய இருவருக்குமிடையே தான் முக்கிய போட்டி நிலவுகிறது.

சிதம்பரம் மக்களவை (தனி) தொகுதியில் 13 பேர் போட்டியிடுகிறார்கள். காவிரியின் கிளை நதியான கொள்ளிடப்பாசன வசதிகளைக் கொண்ட இத்தொகுதியில் அண்ணாமலை பல்கலைக் கழகம் அமைந்துள்ளது.

தமிழகத்தின் சிவாலயங்களில் மிகப் புகழ்பெற்ற நடராஜர் கோவில் வரலாற்றுச் சிறப்பு மிக்கது. இதுவும் இங்கேதான் அமைந்திருக்கிறது.

புவனகிரி, குறிஞ்சிப்பாடி, காட்டு மன்னார் (தனி) தொகுதி, விருத்தாச்சலம் மங்களூர் (தனி) தொகுதி மற்றும் சிதம்பரம் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளையும் இது உள்ளடக்கியது.

இம் மக்களவைத் தொகுதியில நெய்வேலி பழுப்பு நிலக்கிரி நிறுசனத்தின் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன.

இத் தொகுதியில் 13 வேட்பாளர்கள் களத்திலுள்ள போதிலும் பா.ஜ.க.வேட்பாளர் பெரியசாமி, பா.ம.க.வேட்பாளர் முன்னாள் மத்திய அமைச்சர் பொன்னுசாமி, மக்கள் கூட்டணியைச் சேர்ந்து விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் திருமாவளவன் ஆகியோருக்கிடையே தான் போட்டி நிலவுகிறது.

நாகபட்டினம் (தனி) தொகுதி காவிரியின் கடைமணித்தொகுதியாகும் 13 வேட்பாளர்கள் போட்டியிடும் இத்தொகுதியில் அ.இ.அ.தி.மு.க.வேட்பாளர் ரி.வி. அர்ஜுனனுக்கும், கலைக்கப்பட்ட மக்களவை உறுப்பினரும், தி.மு.க. வேட்பாளருமான ஏ.சி.எஸ். விஜயனுக்குமிடையே தான் பிரதான போட்டி நிலவுகிறது.

வேளாண் தொழிலாளர்களும் மீனவர்களும் கணிசமாக உள்ள இத்தொகுதியில் நர்கபட்டினம் துறைமுகம், நரிமணம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைபோன்ற ஒரு சில தொழில்கள் மட்டுமே உள்ளன.

நாகபட்டினம், நன்னிலம் திருவாரூர், திருத்துறைப் பூண்டி, மன்னார்க்குடி, வேதாரணியம் ஆகிய 6 சட்டப்பேரவைத் தொகுதிகளை உள்ளடக்கியது இத் தொகுதி.

பெரம்பலூர் மக்களவை (தனி) தொகுதியில் 7 வேட்பாளர்கள் களத்தில் உள்ள போதிலும் ஆ.இ.அ.தி.மு.க. வேட்பாளர் டாக்டர் எம்.சுந்தரத்துக்கும், தி.மு.க. வேட்பாளரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ஏ.ராஜாவுக்கும் இடையே தான் பிரதான போட்டி.

பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்து ஆண்டிமடம், ஜெயங்கொண்டான், பெரம்பலூர், அரியலூர், வடலூர் ஆகிய 5 சட்டப்பேரவைத் தொகுதிகளும் திருச்சி மாவட்டத்தைத் சேர்ந்து உப்பிலியாபுரம் தொகுதியும் இத் தொகுதிக்குட்பட்டவை.

பச்சை மலை அடிவாரத்தில் உள்ள இப்பகுதி வானம் பார்த்த பூமியாகும்.

சில சிமெந்து தொழிற்சாலைகளைத் தவிர குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வேறு தொழில் ஏதும் இப் பகுதியில் இல்லை. (து)

# பா.ஜ.க.மக்களை ஏமாற்றுகிறது

நாட்டின் வளர்ச்சிக்குக் காங்கிரஸ் கட்சி அமைத்த அடித்தளத்தை



பா.ஜ.கட்சித் தலைமையிலான சேதிய ஜனநாயகக் கூட்டணி அரசு தமது சாதனைகளாகக் கூறி மக்களை ஏமாற்றி வருகிறது என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கூறியிருக்கிறார்.

மத்தியப் பிரதேச பென்ற நகரில் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் ஆண்டுக்கு ஒருகோடி வேலைவாய்ப்புகளை அளிப்பதாகக் கூறிய உறுதிமொழியை நிறைவேற்றாமல் பல்வேறு தொழிற்சாலைகளையும் மூடுவதால் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தற்போதைய அரசு அதிகரித்து வருகிறது எனக் கூறினார்.

தகவல் தொழில்நுட்பம், கணனி ஆகிய உயர் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்துக்கு ராஜிவ் காந்தியின் முன் முயற்சியே காரணம். ஆனால் இதற்கும் தாமே காரணம் என்ற கருத்தை ஏற்படுத்த வாஜ்பாய் அரசு முயற்சிக்கிறது என்றார்.

கலவி, தொழில் நுட்பம், வேலைவாய்ப்பு, பஞ்சாயத்து முதலான பலதுறைகளில் ராஜிவ்காந்தி அரசு குறிப்பிடத்தக்க வளர்ச்சியை ஏற்படுத்தியது என்று சோனியா காந்தி தெரிவித்தார். (து)




# தோல்விப் பயத்தில் பா.ஜ.க. தலைவர்கள்; தி. மு. க. தலைவர் கருணாநிதி கிண்டல்

(அரும்புக்கோட்டை)

வாக்குப் பதிவுக்குப் பிந்திய கருத்துக் கணிப்புக்களின் முடிவுகளால் பா.ஜ.க.தலைவர்கள் பீதியடைந்திருப்பதாகவும், அதனால் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் அவர்கள் பேசி வருவதாகவும் தி.மு.க.தலைவர் கருணாநிதி கூறியிருக்கிறார்.

அரும்புக்கோட்டையில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய அவர் இந்தியா ஒளிர்கிறது என்று கூறிய பா.ஜ.க.தலைவர்கள் தற்போது தோல்விபயத்தில் ஆழ்ந்திருப்பதாகத் தெரிவித்தார்.

மத்தியில் காங்கிரஸ் கட்சியால் மட்டுமே நிலையான ஆட்சியைத் தரமுடியும் என்று கருணாநிதி கூறினார். (து)

# தேர்தலில் போட்டியிடும் சிறைக் கைதிகள்

தேர்தல் சட்டங்களின் கீழ் வாக்குரிமை நிராகரிக்கப்பட்டு, ஆனால் அதேசமயம் தேர்தலில் போட்டியிடும் சிறைச் சாலையிலுள்ள கைதிகள் வேட்புமனு தாக்கல் செய்கின்ற தொகுதிகளில் தேர்தல்களை நிறுத்திவைப்பது பற்றித் தேர்தல் ஆணையம் பரிசீலிக்க வேண்டுமென பாட்னா உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

இது குறித்துத் தாக்கலான பொதுநல மனுவின் மீது தீர்ப்பளித்த நீதிமன்றம் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு முன்பாக இத் தொகுதிகளில் நடந்த தேர்தல்களை முடக்கி வைப்பது பற்றியும் தேர்தல் ஆணையம் பரிசீலிக்க வேண்டுமென்று கருத்துத் தெரிவித்துள்ளது. (து)

## இந்தியச் செய்திகள்



தீப்பந்தம் ஏந்திக் கொண்டு ஹொல்கத்தாவில் கடந்த வெள்ளிக்கிழமை ஊர்வலம் நடத்திய விலை மாதர்கள். தங்களது தொழிலுக்கு உரிமையும் அங்கீகாரமும் வேண்டி இந்த ஊர்வலத்தை நடத்தினர்.

# பொடா வழக்கு விசாரணை ஒத்திவைப்பு இல்லை

(சென்னை)

பூந்தமல்லி பொடா நீதிமன்றத்தில் ம.தி.மு.கவினருக்கு எதிராக நடைபெற்று வரும் வழக்கு விசாரணையை ஒத்திவைக்க வேண்டும் என்ற வைக்கோவின் கோரிக்கையை பொடாநீதிமன்றம் கடந்த வெள்ளிக்கிழமை நிராகரித்தது.

பொடா மறு ஆய்வுக்குழுவின் முடிவுக்கு ஏற்ப இந்த வழக்கைத் திரும்பப்பெறுமாறு அரசு வழக்கறிஞருக்கு தமிழக அரசு உத்தரவிடும் வரை இந்த வழக்கில் விசாரணையை ஒத்திவைக்கவேண்டும் என்று வைக்கோ தனது மனுவில் கோரியிருந்தார்.

கிருமினல் நடைமுறைச் சட்டம் 321 பிரிவின் படி, வைக்கோ மீதான வழக்கைத் திரும்பப் பெற முடியுமா என்று பரிசீலிக்குமாறு அரசு வழக்கறிஞருக்கு, அரசு கடிதம் எழுதலாம் என்று உயர் நீதிமன்றம் யோசனை தெரிவித்திருந்தது. இதன் அடிப்படையில் விசாரணையை ஒத்திவைக்குமாறு வை.கோ கோரியிருந்தார். மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிபதி இது குறித்து அரசு வழக்கறிஞர் கருத்தைக் கேட்டார். இதற்குப் பதிலளித்த அரசு வழக்கறிஞர் ஜெயக்குமார், அரசு பதிலளிக்கும் வரை இந்த வழக்கு விசாரணையை ஒத்திவைக்கவேண்டுமெனக் கோருவது முறையற்றது என வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி ராஜேந்திரன், இம் மனுவை தள்ளுபடி செய்துள்ளார். (து)

# நடுரோட்டில் 45 நிமிடங்கள் கருணாநிதியின் அனுபவம்

(தூத்துக்குடி)

முதல்வர் ஜெயலலிதா செல்வதற்காக திருநெல்வேலி புறவழிச் சாலைப் புதுப்பாலத்தில் என்னை 45 நிமிடம் நடுரோட்டில் காக்க வைத்துவிட்டனர் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி வேதனை



தெரிவித்தார்.

காயல்பட்டினத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு நடைபெற்ற தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் அவர் பேசியபோது,

இந்தக் கூட்டத்துக்கு இன்னும் முன்னதாக வந்திருக்கக் கூடும். நெல்லையில் ஏற்பட்ட ஒரு பிரச்சினை காரணமாக இவ்வளவு நேரமாகிவிட்டது.

நெல்லையில் அண்மையில் நடந்த தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தில கலந்து கொண்டேன். என்ன காரணத்தினாலோ ஏற்கெனவே வரையறுக்கப்பட்ட முதல்வரின் சுற்றுப்பயணத் திகதிகள் மாற்றப்பட்டு இப்போது நான் பேசிய பின் பேசவேண்டும். என்பதற்காக வேறு திகதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

அவர் நெல்லையில் பேசி முடித்து இந் நேரம் கூட்டம் கலைந்திருக்கும். நீங்கள் புறப்படுங்கள் என்று பொலிஸார் சொன்னதன் பேரில் தாழையூத்திலிருந்து புறப்பட்டேன். திருநெல்வேலி தாமிரபரணி, புறவழிச்சாலைப் பாலத்தில் வந்ததும் எங்களைத் தடுத்து நிறுத்தி 45 நிமிடம் காக்க வைத்துவிட்டார்கள். முதல்வர் கடக்கும் போது வேறு எந்த வாகனமும் கடக்கக் கூடாது என்று தடுத்துவிட்டார்கள் .

ஆனால்,திருநெல்வேலி ஈரோடு மேம்பாலத்தில் முதல்வர் தனது காரை நிறுத்திவிட்டு எனது காரையும போகவிடாமல் அழிச்சாட்டியம் செய்துவிட்டார். எனக்கு இதில் வருத்தமில்லை மகிழ்ச்சிதான். முதல்வர் நின்ற ஈரோடு மேம்பாலமும், நான் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்ட மேம்பாலமும் தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்டவை. முதல்வரைக் காத்துநிற்க நான் கட்டிய பாலம் பயன்பட்டது. அந்த வகையில் எனக்கு மகிழ்ச்சி. இப்படிப்பட்ட தடைகளால் எனது காயல்பட்டினப் பயணம் நிற்கவில்லை. அதுபோல் கழகத்தின் பயணமும் நிற்காது. வென்றே தீரும்.

எந்த ஊரின் மீது நம்பிக்கை இருந்தாலும் இல்லாவிட்டாலும் காயல்பட்டினம் மக்கள் அளிக்கும் வாக்கு நிச்சயம் பொய்க்காது என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்மீது உங்களுக்கு செல்லக் கோபம் உண்டு. பா.ஜ.கவுடன் தி.மு.க.தலைவர் என்ற முறையில் கூட்டுச் சேர்ந்தேன். இப்போது அதிலிருந்து வெளியே வந்து உங்களுடன் இணைந்துவிட்டேன்.

நான் அங்கு இருந்த போது நீங்கள் என்மீது பாய்ந்து விழவில்லை, கனிவாக நடந்து கொண்டீர்கள் அதனால் தான் இந்த சந்திப்பு இவ்வளவு உணர்ச்சி மயமாக இருக்கிறது.

அந்த உறவு நம்மிடையே மலர்ந்து நீண்ட காலமாகிறது. அந்த உறவை என்றென்றும் காப்பாற்றுவேன். அந்த உறுதியை உங்களுக்கு அளிக்கிறேன் என்றார் கருணாநிதி. (து)

# மட்டு-அம்பாறையில் நீடிக்கும் சிக்கல்களுக்குத் தீர்வு காணப்படும்!

## மே தினக் கூட்டத்தில் கௌசல்யன் உறுதி

(மட்டக்களப்பு)

**விடுதலைப் போராட்ட வரலாற்றில் பல நெருக்கடிகளை, சிக்கல்களை சந்தித்திருந்தும் அவற்றையெல்லாம் சாதுரியமாக வெற்றி கொண்டதன் விளைவாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் பலமான நிலையில் இருந்து வருகின்றது. இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார்.**

மட்டக்களப்பு களுதாவளை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன் தினம் மாலை நடைபெற்ற மே தினப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே கௌசல்யன் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

அண்மைக் காலத்தில் மட்டக்களப்பு-அம்பாறை பிரதேசத்தில் ஏற்பட்ட நெருக்கடியை நாம மிகவும் நிதானமாகக் கையாண்டு தீர்வு கண்ட நிலையிலும் அங்கு இன்னமும் சிக்கல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. எனினும், அவற்றிற்கு விரைவில் தீர்வு காணப்படும்.

உலகெங்கிலும் உள்ள தொழிலாளர்கள் தமது உரிமைகளைப பெற்ற நாளாக மே தினத்தைக் கொண்டாடுகிறார்கள். ஆனால், எமது நாட்டில் தமிழினம் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக அடிமைப்பட்ட இனமாகவே இருந்து வருகிறது.



அடக்கப்பட்ட தமிழினம் துன்ப துயரங்களில் இருந்து மீள்வதற்காக அஹிம்சை ரீதியில் போராடியபோதும் அவர்களின் உரிமைகள் மறுக்கபபட்டன.

தமிழர் என்ற காரணத்திற்காகப் பலர் கொல்லப்பட்டார்கள். இதன் காரணமாகவே எமது தேசியத் தலைவர் தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காக ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார். இன்று தமிழ் மக்களைப் பாதுகாக்கக் கூடிய பலம்வாய்ந்த இராணுவமாக தமிழீழ விடுதலைப புலிகள் வளர்ச்சி பெற்றுள்ளார்கள். இந்த வளர்ச்சிக்குக் காரணம் தமிழ் பேசும் மக்களே. இராணுவ ரீதியில் பலம்மிக்க சக்தியாக வளர்ச்சி பெற உதவிய மக்கள் இன்று அரசியல் பலத்தையும் ஆணையையும் எமக்கு வழங்கியிருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதைக் கடந்த பொதுத் தேர்தல் மூலம் மக்கள் நிரூபித்திருக்கிறார்கள்.

அரசியல் இராணுவ பலத்தோடு தமிழீழ மக்கள் இருக்கின்ற போதிலும் தமிழினம் அடக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. விடுதலைக்காக இனனமும் பயணம் செய்ய வேண்டியவர்களாக தமிழ் மக்கள் உள்ளார்கள் எனவும் கௌசலயன தெரிவித்தார்.

(ந-121)

# முரண்பாட்டு அரசியலை முறியடிக்க பிரேமதாஸவின் வழிமுறையே தேவை

## நினைவு தினத்தில் ரணில் உரை

(கொழும்பு)

முரண்பாட்டு அரசியலை முறியடிப்பதற்கு காலஞ்சென்ற ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் அரசியல் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

நேற்று முன் தினம் நடைபெற்ற காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாஸவின் 11ஆவது சிரார்த்த தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ரணில் விக்கிரமசிங்க இதனைத தெரிவித்தார். அங்கு அவர் மேலும கூறுகையில்,

பிரேமதாஸ முன்வைத்த சில யோசனைகள் இன்னும் நடைமுறையில் இருக்கின்றது. இந்த யோசனைகளுக்கு அமைய தற்போது சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவையும் அமைக்கக் கூடியதாக இருபபதாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

(ந-121)

# அரச ஊழியர்களுக்கு விரைவில் சம்பள உயர்வு!

## அமைச்சர் பிரேமஜயந்த தகவல்

(கொழும்பு)

அரச ஊழியர்களின் சமபள முரண்பாட்டை நீக்க சம்பள உயர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளரும், அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

நவகமுவ ஹொரகொடுவப் பாதை நிர்மாண ஆரம்ப விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரச ஊழியர்களுக்கு விரைவில் சம்பள உயர்வு வழங்குவதற்கு விசேட குழுவொன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. ஓய்வூதியம் பெறுவோரின் சம்பள முரணபாட்டை நீக்கி அவர்களுக்கான நிலுவைகளும் வழங்கப்படும். அத்துடன் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கவும், கல்விப் பொதுத்தராதர உயர்தரம் மற்றும் சாதாரண தரம் ஆகியவற்றில் சித்தியடைந்தவர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், இந்த வேலை வாய்ப்பு வழங்கும் நடவடிக்கைகள் யூலை மாதத்தில் ஆரம்பமாகும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(ந-121)




**வீதிச்சமிக்ஞை குறியீடுகளை மறைத்து பிரசுரங்கள் ஒட்டப்படுவது உயிர் அபாயமுள்ள விபத்துக்களுக்கு வழிசமைக்கும்.**

**யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் முன்பாகவுள்ள பாடசாலை சமிக்ஞை பலகைமீது ஒட்டப்பட்டுள்ள பிரசுரத்தைப் படத்தில் காணலாம். படம்: பவன்**

## நீதித்துறை அதிகாரிகளுக்கு—

# எதிரான முறைப்பாடுகளை விசாரிக்க துரித நடவடிக்கை

(கொழும்பு)

நீதித்துறை அதிகாரிகளுக்கு எதிராகச் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் மீதான விசாரணைகளை மேற்கொள்ள துரிதநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

நீதித்துறை அதிகாரிகள் பலதரப்பட்ட மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்ற வகையிலேயே நீதி பரிபாலன சேவை ஆணைக்குழு முறைப்பாடுகளைப் பெற்று வருகின்றது எனக் குறிப்பிட்டார் அவர்.

நீதிபதிகளுக்கு எதிராகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றது. இதனால் இத்தகைய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு விசேட குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும்,

இதேவேளை, ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படவுள்ளதாகவும் பிரதம நீதியரசர் மேலும் தெரிவித்தார்.(60,10)

**வடக்கு-கிழக்கில் உறுதி....**

அறவிடவேண்டும் என்பதில் மிகப் பழைய சட்ட கட்டணமே உள்ளது. இது நடைமுறைக்கு ஒவ்வாது எனினும் யாழ்.மாவட்டத்தில் பொதுவான கட்டணமாக நூற்றுக்கு இரண்டு(2%) வீதமே அற விடப்படுகிறது. இது சிலர் கூட்டியும், சிலர் குறைத்தும் அறவிடுகின்றனர். கூட்டி அறவிடும் நொத் தாரிஸ்மார் உறுதியில் எதிர்காலத்தில் ஏற்படும் சகல சட்டப்பிரச் சினைகளுக்கும் தீர்வுபெற்றுக் கொடுப்பாரேயானால் அவ்வாறு கூடிய கட்டணத்தை தமக்குப் பெற்றாலும் நியாயமெனலாம்.

எது எப்படி இருப்பினும் நொத்தாரிஸ் தொழில், கண்ணியத் தொழில் இதற்கு நேர்மை அவசியம். அத்துடன் முத்திரைவரி தொடர்பில் பொது மக்களுக்கு மட்டுமன்றி நொத்தாரிஸ் மார்களுக்கும் பலவகையான பிரச்சினைகளை உண்டு பண்ணும் என்பதை மேலே விரிவாக ஆராய்ந்தோம். எனவே வடக்குக் கிழக்கு காணி சம்பந்த மான முத்திரைவரி உறுதிகளுக்கு அறவிடுவது தொடர்பில் எல்லோரும் சேர்ந்தாலும் முடிவு எட்ட முடியாது. ஏனெனில் மேற்படி புதிய மாகாணசபை வடக்குக் கிழக்கில் தெரியப்பட்டு அது முத்திரைவரி தொடர்பில் பின்னோக்கி ஆளும் சட்டம் உருவாக்கி அது உயர் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தி உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால் மட்டுமே இறுதி முடிவினை எட்ட முடியும். அதுவரை பொது மக்களும், நொத்தாரிஸ்மாரும் தாம் தாம் தனிப்பட்ட முறையில் சிந்தித்து செயலாற்ற வேண்டியதே சரியானதாகும். □

# சுற்றுலாப் பயணிகள் மீது குளவிகள் கொட்டின

## 200 பேர் காயம்

சிகிரியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டவர்கள் மீது குளவிகள் கொட்டியதால சுமார் 200 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் பிற பகல் 3.00 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிகிரியாவுக்குச் சுற்றுலா சென்றிருந்த பாடசாலை மாணவர்கள் சிலர் அங்கிருந்த குளவிக் கூடுகள் மீது கற்களை வீசியதால் இந்த விபரீதம் இடம் பெற்றுள்ளதாக காயமடைந்த ஒருவர் தெரிவித்தார்.

(ந-121)

## வலம்புரிச் செய்தியாளர்களுக்கான விசேட கூட்டம்

**வலம்புரியின் பிரதேச செய்தியாளர்களுக்கான விசேட கூட்டம் எதிர்வரும் 05.05.2004 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு வலம்புரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.**

**இக்கூட்டத்தில் செய்தியாளர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.**

**நிர்வாக உத்தியோகத்தர்.**

# அரசு கவனமெடுக்கத் தவறின் மலையக மக்கள் தமக்குரிய பாதுகாப்பை தாமே தேடிக்கொள்வர்

## சந்திரசேகரன் எச்சரிக்கை

(கொழும்பு)

மலையக மக்களின் பாதுகாப்பிற்கும், ஏனைய கோரிக்கைகளுக்கும் அரசு செவிமடுத்து உரிய நடவடிக்கைகளை ஏற்ற காலத்தில் செய்யத்தவறும்பட்சத்தில், மலையக மக்கள் தமது பாதுகாப்பை தாமே தேடிக்கொள்ளவிளைவதைத் தடுக்க முடியாது என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுபபினருமான பெ.சந்திரசேகரன் தனது கட்சி சார்பாக வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள மேற்படி பத்திரிகைச் செய்தியில்,

கந்தப்பொல நகரில் ஏற்பட்ட கலவரத்தின்போது இருவர் கொல்லப்பட்டும் பல தமிழ் இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளதுடன், தமிழர்களின் கோடிக் கணக்கான ரூபாய் சொத்துக் களும் திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்டு அப்பகுதி தமிழ்த் தொழிலாளர்கள் பல வேறு இன்னல்களுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர்.

இதன் உண்மையான சூத்திரதாரிகளை இனங்கண்டு, குற்றவாளிகள் எவராக இருந்தாலும் எவருக்கும் பாரபட்சமற்ற முறையில் தண்டனை வழங்கப்பட வேண்டும் என மலையக மக்கள் முன்னணி அரசாங்கத்தை வலியுறுத்து கின்றது.

கடந்த காலங்களில் எல்லாம் இதேபோன்று மலையகத் தமிழர்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட திட்டமிட்ட தாக்குதல்கள் குறித்து நடவடிக்கை எடுக்கக்கோரி ம.ம.முன்னணி அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுத்துள்ளது. ஆனாலும், இவற்றை வெறும் காகிதக் கோரிக்கைகளாகவே சம்பந்தப்பட்டவர்கள் கணித்து வந்துள்ளனர்.

கந்தப்பொல சம்பவத்தையும் வெறும் காகிதக் கோரிக்கை ஆக்கிவிடாமல் இருப்பதற்காக தமிழ் மக்களின் அவலங்களை உறுதியாக வெளிப்படுத்தும் வகையில் மலையக மக்கள் முன்னணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இணைத்துக் கொண்டு தனது வேலைத் திட்டங்களை வடிவமைக்கத் தீர்மானித்துள்ளது.

மலையக மக்கள் முன் னணியின் இந்தத் தீர்மானத்தினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளதோடு இவ்விணைந்த செயற்பாட்டிற்கு மலையக மக்கள் முன்னணி எதிர்பார்க்கும் வகையில் தனது பூரண ஆதரவினை வழங்குவதற்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உடன் பட்டுள்ளது.

மேலதிக இக்கூட்டு நடவடிக்கை தொடர்பாக மலையகமக்கள் முன்னணி தமிழ்த் தேசிய கூட்டமைப்போடு தற்போது பேச்சு வார்த்தைகளை நடத்திவருகிறது.

மேலும், ஏற்கனவே திட்டமிட்டவாறு இன்று திங்கட் கிழமை மலையக மக்கள் முன்னணி அனைத்து தொழிற் சங்கங்களையும் இணைத்துக் கொண்டு ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்திலும் ஈடுபடத் தீர்மானித்துள்ளது.

இன்று மலையகத்தின் பல இடங்களிலும் உயிரிழந்த தொழிலாளர்களுக்காக இரங்கல் கூட்டங்களை நடத்துவதற்கு மலையக மக்கள் முன் னணி ஏற்பாடு செய்துள்ளது. அதேநேரம் இந்தச் சம்பவத்தோடு தொடர்பு உள்ளவர்களை உடனடியாக விசாரணை செய்து கண்டறிந்து தண்டனை வழங்க வேண்டுமென ஜனாதிபதியை கோருவது எனவும்தற்போதைய நிலையில் முழுத் தமிழ் மக்களுமே நுவரெலியா காவல்துறையினர் மீது நம்பிக்கை இழந்து இருப்பதால் நுவரெலியா காவலதுறை பிரிவுக்கு குறைந்தது ஒரு தமிழ் சிரேஸட உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை நியமிப்பதற்கு ஜனாதிபதியை அழுத்தம் கொடுப்பது எனவும் மலையக மக்கள் முன்னணி முடிவெடுத்துள்ளது.

அத்தோடு இந்தச் சம்பவம் தொடர்பாக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தி எக்காரணம் கொண்டும் தோட்டத் தொழிலாளர்களைக் கைது செய்யக்கூடாது.

ஏனைய எமது கோரிக்கைகளுக்கு அரசு செவிமடுத்து உரிய நடவடிக்கைகளை ஏற்ற காலத்தில் செய்யத் தவறும் பட்சத்தில் மலையக மக்கள் தமது பாதுகாப்பை தாமே தேடிக்கொள்ள விளைவதைத் தடுக்க முடியாது. இவ்வாறான ஒரு நிலைக்கு மலையகமக்கள் தள்ளப்படுவதற்குள் முன்னர் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கந்தப்பொல நகரில் தற்போது அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்தை உடனடியாக அகற்றுமாறு பொதுமக்கள், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகர் அவர்களிடம்விடுத்த கோரிக்கையை அடுத்தே ஜனாதிபதியிடம் இவ்விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (18)

## சடலம் கண்டெடுப்பு

(நுவரேலியா)

நுவரேலியா நானோயா பகுதியில் இருந்து சுமார் 35 வயது மதிக்கத்தக் ஆணின சடலம் ஒன்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதுவரை அடையாளம் காணப்படாத இந்தச் சடலத்தை அடையாளம் காணும்பொருட்டு பொலிஸார் நுவரேலியாவிலுள்ள வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

மேற்படி நபரின் மரணம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த புதன் கிழமை இரு குழுக்களுக்கிடையில் இடம் பெற்ற மோதல் சம்பவத்தில் இருவர் உயிரிழந்தமை தெரிந்ததே.

(61,10)

## நோர்வேயில் மே தின நிகழ்வு 2 ஆயிரம் பேர் பங்கேற்பு

(கொழும்பு)

நோர்வேயில் புலம் பெயர்ந்து வாழும் இலங்கையர்கள் அந்நாட்டின் முக்கிய நகரங்களில் தமது மே தினக் கூட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தியுள்ளார்கள்.

தமிழர்கள் செறிந்து வாழும் பேஹன், ஒஸ்லோ ஸ்றாங்கோ போன்ற நகரங்களில் நடைபெற்ற ஊர்வலங்கள் கூட்டங்களில் கலந்து கொண்ட மக்கள் "சர்வதேச சமூகமே தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரி..." என்ற கோசங்களை எழுப்பினார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவரின் படங்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொடி ஆகியவற்றைத் தாங்கிய வண்ணம் சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் ஊர்வலமாக சென்றார்கள்.

இந்தஊர்வலத்தின் போது கலாசார நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இறுதியில் மேதின நிகழ்வு ஒழுங்கமைப்பாளர்கள் மற்றும் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஆதரவாளர் ஆகியோரது உரைகளும் இடம் பெற்றன.

(61,10)

## மண்டைதீவு செல்வோர் மீது கடற்படையினர் கெடுபிடி

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப்பகுதிக்கு கையடக்கத் தொலைபேசி, புகைப்படக் கருவிகள் என்பவற்றை எடுத்துச் செல்ல கடற்படையினர் தடை விதித்துள் ளனர்.

அண்மைக் காலமாக நடைமுறையில் உள்ள இந்தக் கெடுபிடிகளால பயணிகள் பல விதமான அசௌகரியங்களையும் எதிர் கொண்டு வரு கின்றனர்.

இதேவேளை, மேற்படி பிரதேச வாசிகள் தவிர்ந்த ஏனையோர் அங்கு செல்வதாயின் பண்ணைப் பகுதியை அண்மித்துள்ள கடற் படையினரது சோதனைச் சாவடியில் அடை யாள அட்டைகளை ஒப்படைத்துவிட்டுச் செல்லவேண்டும் என்றும் திரும்பிச் செல்லும் போது அவற்றைப் பெற்றுச் செல்ல வேண்டும் என்ற நடை முறையை படையினர் அமுல்படுத்தியுள்ளனர்.

படையினரது இக் கெடுபிடி நடவடிக்கைகளால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்க ளையும் அனுபவித்து வருகின்றனர்.

(4)

## ஜனாதிபதியின் சமாதான முயற்சிகளுக்கு தேசிய சமாதான மன்றம் வரவேற்பு

(கொழும்பு)

சமாதான பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கு நோர்வே அரசாங்கம் அனுசரணை வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நோர்வேக்கு அழைப்பு விடுத்திருப்பது வரவேறகத்தக்க விடயம் என இலங்கை தேசிய சமாதான மன்றம் தெரிவித் துள்ளது.

இது தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருபபதாவது.

ஜனாதிபதி, சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற் காக நேர்வேயின் உதவியை நாடியிருப்பது சமாதானம் நிட்சயமாக மலரும் என்ற நம்பிக்கையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் இடம் பெற்ற பொதுத் தேர்தலின் பெறுபேறுகள் சமாதான நடவடிக்கைகளை நிராகரிக்கும் வகையில் ஜனாதிபதியின் சமாதான முயற்சிக்கு அனுசரணை வழங்குமாறு விடுத்த கோரிக்கை பிரதிபலிக்கின்றது.

எனவே, ஜனாதிபதியின் இந்தக் கோரிக்கைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் ஆக்கபூர்வமான பதிலைக் கொடுக்க வேண்டும்.

இதேவேளை, சமாதான நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டுமானால் அரசாங்கத்திற்கும் எதிர்க் கடசிகளுக்கும் இடையில் ஓர் புரிந்துணர்வு ஏற்பட வேண்டும் என்றுள்ளது.

(60,10)

## மிதிவெடி அகற்றுவதற்கான நிதி பெறுவதில் சிரமம்

"நிலக்கண்ணி வெடி களைப் பயன்படுத்தவதில்லை என்ற "ஒட்டவா" உடன்படிக்கை யில் இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் இதுவரையில் கைச்சாத்திடவில்லை.

இதனால் இலங்கையில் மிதிவெடி அகற்றுவதற்கான நிதி உதவியை சர்வதேச நாடுகளிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாக தேசிய சமாதானப் பேரவையின் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.பாலகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ் குடாநாட்டில் மிதி வெடிகளை அகற்றும் பணியில் ஈடுபடடுளளோர்களிடையே சிறந்த வினைத்திறன் காணப்படுகிறது.

ஆனால் அவர்கள் தம் செயறபாடுகள் மூலம் வெடி பொருள் அபாயமற்ற பூமியாக யாழ் குடாநாட்டினை மாற்றியமைப்பதற்கு போதியளவு வளங்கள் காணப்படவில்லை.

மிதிவெடி புதைப்புத்தொடர்பானசரியான வரைப்படங்கள் கிடைக்காமையினால் அவர்கள் தமது துரித பணிகளை தொடர முடியாத நிலை காணப்படுகிறது.

(4)

# தமிழ் மக்களின் தேசிய எழுச்சியே எதிர்காலத்தை தீர்மானிக்கும் சக்தி

## மேதின நிகழ்வில் இளம்பரிதி உரை

(யாழ்ப்பாணம)

தமிழர்களின் ஒன்றுபட்ட இராணுவ அரசியல் மற்றும் தேசிய எழுச்சி தான் தமிழர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக அமையும்.

எமக்கு ஒரு நிலையான அடித்தளம் ஒன்றை இடுவதன் மூலமே நோர்வே நாட்டின் அனுசரணையுடன் புதிய அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பித்து நாட்டில் நிரந்தர சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்த முடியும் என யாழ்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி தெரிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் பெரும் எழுச்சியுடன் நடைபெற்ற மேதின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தமிழர்களின் சொந்த நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளதுடன் தொழில்களும் முடக்கப்பட்டு பாதிப்புக்களுக்குள்ளாக்கப்பட்டன இதனால தமிழர்கள் தொழில் ரீதியாக பெரிதும் அடக்கப் பட்டுள்ளனர்..

இவற்றிலிருந்து விடுபட்டு சுயகௌரவமாக மதிப்புடனும் சகல வளங்களுடனும் தன்னிறைவு பெற்று வாழ்வதற்கு எமக்கென்றெரு தனி நாடு வேண்டும். தமிழர்களுக் கென்று தனிநாடு இருக்கும் பட்சத்தில் தான் எமது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உரிய வழி முறைகளை ஏற்படுத்தமுடியும். தொழிலாளர் வர்க்கம் தமது உரிமைகளுக்காக உயிர்த்தியாகங்களை மேற்கொண்டதனால் தான் இன்று தொழிலாளர்களின் உரிமைகள் வென்றெடுக்கப்பட்டிருக்கின்றன. இதேபோன்று தான் தமிழ் மக்களின் ஏனைய உரிமைகளும் வென்றெடுக்கப்பட வேண்டும்

எமக்கென்றொரு நாடு வேண்டும் என்பதற்காக பற்றுறுதியுடன் போராடிக்கொண்டிருக்கும் தமிழ் மக்களின் செயற்பாடுகளுக்கு உயிர் கொடுக்கும் வகையில் எமது தேசியத் தலைவர் இராணுவ அரசியல் இராஜதந்திர முறைகளைக் கையாண்டு வருகிறார். போராட்டத்தை மிகவும் நேர்மையுடன் வழிநடத்திக் கொண்டிருக்கிறார்.

உலக நாடுகளில் உள்ள தமிழர்கள இன்று தலைநிமிர்ந்து நிற்பதற்கு எமது தலைவரின் நேர்மையான வழிநடத்துதலுடனான போராட்டமே காரணம். இந்தக் கட்டுமானம் உலகில் பலராலும் இன்று பெரிதும் கௌரவிக்கப்படுகிறது.

எமக்கென்று தொழில் கல்வி மற்றும் கௌரவம் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் எமக்கென்றொரு நாடு வேண்டும் எனத் தெரிவித்தார். (18)

# இன்று ஒரு தகவல்

## நாயின் நல்ல பண்புகள்

"உங்களுக்கு கடவுள் பக்தி உண்டா?" என்று கேட்டார் ஒருவர். உண்டு என்று சொன்னார் மற்றொருவர். "அப்படியென்றால் நாயிடமிருக்கும் நல்ல பண்புகள் எல்லாம் உங்களிடம் இருக்க வேண்டும்" என்றார் இவர். மற்றவருக்கு அதிர்ச்சியாகிவிட்டது. ஒன்றும் புரியவில்லை. என்ன திடிரென்று இப்படிக் கூறிவிட்டீர்களே என்றார். நான் ஒன்றும் கிண்டலுக்காக அப்படிச் சொல்லவில்லை. ரலிமார்களின் வரலாறு படித்தேன் அதில் ஹஸன் பஸரி (றஹ்) சொல்கிறார்.

"நாய்களிடம் 10 நல்ல பண்புகள் உள்ளன. இறை நம்பிக்கை உள்ளவர்களிடமும் அந்த பத்து நல்ல பண்புகள் இருக்க வேண்டியது அவசியம்" என்கிறார். சரி... அப்படியென்ன 10 நற்பண்புகள் நாய்களிடம் உள்ளன.

முதற் பண்பு, அது பசித்திருக்கும். பசித்திருத்தல் என்பது நல்லவர்களின் நல்ல பண்பு. இரண்டாவது அது தங்குவதற்கு குறிப்பிட்ட இடம் கிடையாது. இந்தப் பண்பு இறை ஆதரவு பெற்றவர்களின் அடையாளம். மூன்றாவது, நாய் இரவில் சிறிது நேரம்தான் தூங்கும். இது இறை காதலர்களின் நற்பண்பு. நான்காவது நாய் செத்தால் அனந்தரம் கொள்ளும் பொருள் அதனிடம் கிடையாது. இது துறவிகளின் அடையாளம்.

ஐந்தாவது, எஜமான் எத்தனை முறை அடித்து விரட்டினாலும் அவனை விட்டு விலகாது. உண்மை ஆன்மீகமானவர்களின் வழக்கம் இது. ஆறாவது அது பூமியில் தாழ்ந்த இடத்தையே பொருத்திக் கொள்ளும். தாழ்மையுடையோரின் நற்பண்பு இது. ஏழாவது நாய் அதனிடத்தினை வேறு ஓர் நாய் ஆக்கிரமித்துக் கொண்டால் அது வேறோர் இடத்தில் போய்ப் படுத்துக்கொள்ளும். இறை நாட்டமுள்ளோர் நற்பண்பு இது.

எட்டாவது எத்தனை முறை விரட்டியடித்தாலும் அதன் முன்னால் ஒரு ரொட்டித்துண்டைக் காட்டினால் நட்பால் வருமேயொழிய வினயத்துடன் வராது. இது பக்திமான்களின் நற்பண்பு. ஒன்பதாவது உணவைக் கண்டால் அது தொலைவில் அமர்ந்து வழிபார்த்துக் கொண்டிருக்கும். இது ஏழைகளின் நற்பண்பு. பத்தாவது அது ஒரு இடத்திலிட்டுக் கிளம்பி விட்டால் மீண்டும் அந்த இடத்தைத் திரும்பிப் பார்க்காது. இது விசாரமுடையவர்களின் குணம்.

ஆக நாய்களிடமிருந்தும் நல்லவர்கள் கற்றுக் கொள்ளக்கூடிய நற்பண்புகள் இருக்கின்றனவா? இல்லையா? ஆனால், நாம் என்ன செய்கிறோம். அடுத்தவர்களைத் திட்டுவதற்குத்தான் நாய் என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறோம். "அவனிடம் பேச்சுக்கொடுக்காதே நாய் மாதிரி வள்ளென்று விழுவான்'' என்று சொல்வதுண்டு.

ஒருத்தர் விதம் விதமாக நாய்க்குட்டிகள் வளர்த்து விற்றுக் கொண்டிருந்தார். பல்வேறு இனங்கள், வெவ்வேறு ஜாதிகள், வெளிநாட்டு வகை நாய்கள் எல்லாம் கொண்டுவந்து விற்பனை செய்து கொண் டிருந்தார். அவரிடம் ஒருவர் நாய்க்குட்டி வாங்கப் போனார்.

"சார் ஒரு நல்ல ஜாதி நாய்க்குட்டி வேண்டும். எஜமான் விசுவாசம் அதிகமாக இருக்க வேண்டும். எப்போதும் என்னைவிட்டுப் பிரியவே கூடாது. அப்படிப்பட்ட குனமுள்ள ஒரு குட்டியை நீங்களே பார்த்துத் தேர்ந்தெடுத்துக் கொடுங்கள்'' என்றார். "அப்படியென்றால் அதோ உங்களுக்கு வலது பக்கம் கட்டியிருக்கும் கறுப்பு நாய்க்குட்டியைக் கொண்டு செல்லுங்கள்'' என்றார் அவர்.

"இதற்கு எஜமான் விசுவாசம் அதிகமா?" என்று கேட்டார் இவர். "ஆமாம், வளர்ப்பவர்களிடம் மிகவும் பிரியமாக இருக்கும். பிரியவே பிரியாது" என்றார் அவர். "அது எப்படி இவ்வளவு உறுதியாகச் சொல்கிறீர்கள்?" என்றார். "இதுவரை இந்த நாய்க்குட்டியை 7 பேரிடம் விற்றிருக்கிறேன். அழைத்துக் கொண்டுபோன மறுநாளே இங்கு ஓடிவந்துவிடும்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கும்பாபிஷேகம்

(பொன்னாலை)

அராலி அரவம்பிட்டு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேகம் எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இதற்கான பூர்வாங்கக் கிரியைகள் புதன் கிழமை ஆரம்பமாகும்.

(ந-49)

# பல்லாயிரம் பேர் கலந்துகொண்ட மன்னார் மே தின ஊர்வலம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மே தினம் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டதாக அறிவிக்கப்படுகின்றது. மன்னார் மாவட்டத்தின் முத்தரிப்புத்துறை, பேசாலை மற்றும் மன்னார் நகரப்பகுதி ஆகிய இடங்களில் பிரதான நிகழ்வுகள் இடம்பெற்றன.

மன்னார் விளையாட்டரங்கில் இடம்பெற்ற பிரதான நிகழ்வில், மன்னார் மாவட்டத்தின் நானாட்டான், முருங்கன், தலைமன்னார் மற்றும் தாழ்வுப்பாடு ஆகிய பிரதான இடங்களிலிருந்து ஊர்வலமாக நகருக்கு வந்த மக்கள் அங்கிருந்து மன்னார் விளையாட்டரங்கை நோக்கிச் சென்றனர்.

முன்னதாக அலங்கரிக்கப்பட்ட ஊர்திகள், உழவு இயந்திரங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் என்பவற்றின் வாகன அணிவகுப்பு நகரிலிருந்து விளையாட்டரங்கை நோக்கிச் சென்றது. அதனைத் தொடர்ந்து பதாதைகளை ஏந்தியபடி பொதுமக்கள், தொழிலாளர் உரிமைகோரும் கோஷங்களை எழுப்பியபடி சென்றனர். மாலை 4.30 மணிக்கு தமிழர் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. நோகராஜலிங்கம் வினோ தலைமையில் மன்னார் விளையாட்டரங்கில் பொதுக் கூட்டம் இடம்பெற்றது.

முத்தரிப்புத்துறை மற்றும் பேசாலையில் இடம்பெற்ற மே தின நிகழ்வுகளில் பல விளையாட்டு வினோத நிகழ்வுகள் இடம்பெற்றதாகவும் அறிவிக்கப்படுகிறது. (யே)

# மீளவும் போர் மூண்டால் வெளிநாட்டு உதவி பறிபோகும்

## வர்த்தக சமூகம் எச்சரிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணும் நோக்குடன், சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடன் ஆரம்பிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசை வர்த்தக சமூகம் கேட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணப்பட்டாலே பொருளாதாரத்துறையை முன்னேற்ற முடியும் எனச்சுட்டிக் காட்டிய வர்த்தக சமூகம்,

மீண்டும் ஓர்போர் நாட்டில் இடம்பெறுமானால் வெளிநாட்டவர்களின் உதவியைப் பெறமுடியாது போகும் எனவும் எச்சரித்துள்ளது.

தற்போது நிலவிவரும் சமாதானச் சூழ்நிலையில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பலர் தமது முதலீடுகளை இலங்கையில் மேற்கொள்ள விருப்பம் தெரிவித்தபோதும், சமாதானச் சூழ்நிலை தொடர்ந்து நிலவுமா? என்ற அச்சத்தினால் முதலீடுகளை மேற்கொள்ளத் தாமதிக்கின்றார்கள் என்றும் வர்த்தக சமூகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ந-60,10)

# வத்திக்கானின் தூதுவராக பேராயர் மல்கம் ரஞ்சித்

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த பேராயர் மல்கம் ரஞ்சித் இந்தோனேசியாவிற்கும், கிழக்குத் திமோருக்கும் வத்திக்கானின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். வத்திக்கானின் இராஜதந்திரியாக நியமிக்கப்பட்டுள்ள முதலாவது இலங்கையர் இவராவார்.

இரு வருடங்களுக்கு முன்னர் வத்திக்கான் தலைநகரான ரோமில் கிறிஸ்தவ போதனைகளுக்கான புனித திருச்சபையின் இணைச்செயலாளராக நியமிக்கப்பட்டிருந்த இவர், விரைவில் ஜகார்த்தாவிற்குப் பயணமாகவுள்ளார். 57 வயதான மல்கம் ரஞ்சித் சிங்களம், ஆங்கிலம், பிரெஞ்சு, இத்தாலி, ஜேர்மனி, ஸ்பானிஷ், கிரீக், லத்தீன், ஹீப்ரு ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் மிக்கவர். இவர் முன்னர் இரத்தினபுரி ஆயராகவும் கொழும்பின் துணை ஆயராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# இராசி பலன்

**03. 05. 2004**

**(சித்திரை 21 , திங்கட்கிழமை)**

| | |
|---|---|
| திரியோதசி | காலை 6.16 |
| சதுர்த்தசி | பின்னிரவு 4.32 |
| சித்திரை | பின்னிரவு 2.22 |
| இராகுகாலம் | 7.26-8.56 மணிவரை |
| சுபநேரம் | 11.56-1.26 மணிவரை |

**மேடம்**
எடுத்த காரியம் கைகூடும், நல்ல வரவேற்பு, அபூர்வ சந்திப்பு, போசன சுகம்

**இடபம்**
உடல் நலம், தடைப்பட்ட காரியம் கைகூடும், பகைவர் நேசம், மனமகிழ்ச்சி.

**மிதுனம்**
பணத்தட்டுப்பாடு, அஜீரண ரோகம், சொத்துக்களால் கவலை, முயற்சி தாமதம்.

**கடகம்**
தன்னம்பிக்கை குறைவு, வாக்கு மேன்மை, தனவிரயம், காரிய தாமதம்.

**சிங்கம**
கூட்டு முயற்சி, பெருமையடைதல், மனோதைரியம், நண்பர்கள் சந்திப்பு.

**கன்னி**
மனோ சங்கடம், பிரயாணம், அதிக செலவு, எடுத்தகாரியம் தாமதமாகும்.

**துலாம்**
வெகுமானம், சயனசுகம், முயற்சி பலிதம், சிந்தனை மிகுதி.

**விருச்சிகம்**
அமைதிக் குறைவு, சோம்பல் நிலை, காரிய அலைச்சல், தனவிரயம்.

**தனுசு**
நண்பர்கள் சந்திப்பு, தனதானிய சேர்க்கை, காரிய அனுகூலம், போசனசுகம்.

**மகரம்**
நன்கொடை, இஷ்டசித்தி, பெரியோரால் மதிக்கப்படுதல், தொழில்சிந்தை.

**கும்பம்**
சரீரப்பிரயாசை, தேசாந்திர வாசம், உத்தியோக பங்கம், முயற்சி தாமதம்.

**மீனம்**
சரீரபீடை, பொருள் விரயம், மனக் கவலை, காரிய தடங்கல்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

# கைக்குண்டு வீச்சில் 44 பேர் படுகாயம்

## மாருவெலவில் சம்பவம்

(கொழும்பு)

மாருவெல தும்பர்ஙகம என்ற இடத்தில் இடம்பெற்ற இசை நிகழ்வின்போது, கைக்குண்டு வீசப்பட்டதில் அங்கு குழுமியிருந்த 44 பேர் படுகாயமடைந்தனர். நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 6 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு குடும்பத்தின் உறவினர்கள் மத்தியில் ஏற்பட்ட பகைமை காரணமாகவே கைக்குண்டுத் தாக்குதல் இடம்பெற்றதாக, இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-60,10)

# நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மனிதவள அபிவிருத்தி மற்றும் கல்வி கலாசார விவகாரங்கள் அமைச்சின் ஏற்பாட்டில் ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆங்கில டிப்ளோமா கற்கை நெறிக்காக (DETE) யாழ்.பல் கலைக்கழகத்தில் நடாத்தப்பட்ட எழுத்துப்பரீட்சைக்குத் தோற்றிய வர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக சபை மண் டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நேர்முகத் தேர்வுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கிடைக்கப்பெறாதோர் உதவிப் பதிவாளர் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையுடன் இன்றைய தினம் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (உ)

தொழுதகையுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண்ணீரும் அனைத்து - குறள்

வலம்புரி

## கதிர்காமர் சொல்வது உண்மையானால்...

தமிழீழ விடுதலைப்புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு அவர்களுடன் சமாதானப் பேச்சுக் கள் முன்னெடுக கப்படும் என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியிருப்பது தமிழ்மக்களனை வராலும் வரவேற்கத்தக் கதோர் செய்தியாகும்.

இந்தியாவிற்குப் பயணம் செய்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அங்கு வைத்து வழங்கிய செவ்வியில் மேற் கண்டவாறு தெரிவித்ததாக தகவல்கள் வெளி யாகியுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் ஆட்சியில் சமாதானப் பேச்சுக்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுமா? என்ற சந்தேகங்கள் வலுப்பெற்றிருந்த வேளையில், விடுதலைப் புலிகளைத் தமிழ மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக அங்கீகரித்து அதன் அடிப்படையில் சமா தானப் பேச்சுக்களை முன்னெடுக்க அரசு தயாராக இருப்பதாக கதிர்காமர் வெளியிட்ட தகவல், புதிய அரசினால் சமாதானப் பேச் சுக்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் என்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியிலிருந்த காலத்திலேயே இலங்கை இனப்பிரசினைக்கு சமாதானப் பேச்சுக்கள் மூலம தீர்வு காணப்பட வேண்டும் என்ற முடிவும் அதற்கு வெளி நாடொன்றின் அனுசரணை இருக்கவேண்டும் என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது. இந்த முடிவை எடுத்த பெருமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையே சாரும்.

இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை. இங்கு பயங்கரவாதப் பிரச்சினையே உண் டென ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் ஜனாதிபதியாக இருந்த டி.பி. விஜயதுங்கா முழங்கிய காலத்தில் இலங்கையில் இனப் பிரச்சினை உண்டு எனத்துணிந்து கூறிய பெரு மையும் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்காவையே சாரும்.

அவ்வாறு கூறியதன் மூலமாகவே ஜனா திபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி பெருவெற்றி பெற்று ஆட்சி அமைத்தது.

அவரின் ஆட்சியில் சமாதான அனுசரணையாளராக செயற்படுமாறு நோர்வேக்கு அழைப்பு விடுக்கப்பட்டு அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப்பேச்சுக்களும் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் சமாதான இலக்கைக் குழப்புவதில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்தயும் அப்போது வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமரும் முனைப்புடன் செயற்பட்டனர்.

இதுதவிர ஆயுதக் கொள்வனவு, பொருட்களை வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்கான பாதுகாப்பு அமைச்சின் அனுமதி போன்றவற்றால் கொள்ளை லாபம் உழைத்த இராணுவத்தளபதிகளும், அரச உயரதிகாரிகளும் சமாதான முயற்சியை எதிர்த்தனர். இதற்காக விடுதலைப் புலிகள் பற்றி தவறான செய்திகளை ஜனாதிபதியின் காதில் ஓதினர். கூனியின் சூழ்ச்சிக்குப் பலியான கைகேயிபோல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் சமாதான விரோதிகளின் சூழ்ச்சிக்கு பலியானார். சமாதானத்திற்கான யுத்தம் என்ற பேரில் தமிழ் மக்களின் பிரதேசங்களை அழித்தொழித்தார்.

சமாதானத்தை முன்னெடுப்பதாகக்கூறி யுத்தத்தை நடத்தியதால் அவர்மீது வெறு ப்புற்ற மக்கள் அடுத்த ஆட்சியை ரணில்விக் கிரம சிங்காவிடம் ஒப்படைத்தனர்.

எனினும் அவரின் வேகமற்ற சமாதான முயற்சிகள் வெற்றியளிக்காத நிலையில், மீண்டுமொரு சந்தர்ப்பத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு மக்கள் வழங்கியுள்ளனர். இச்சந்தர்ப்பத்தை அவர் நல்லமுறையில் பயன்படுத்தி தன்னால் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சியை வெற்றியடையச் செய்யவேண்டுமாயின் முதலில் யதார்த்தத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். அந்த யதார்த்தத்தின் முதலாவது படிநிலையே புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்வதாகும். அவ்வாறு புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்வதாக வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் கூறியிருப்பது உண்மை யானால்... அது விடயத்தில் எந்தத் தளம்பலும் இல்லை யானால் புதிய அரைசின் சமாதான முயற்சி வெற்றிபெறுமென அறுதியிட்டுக் கூறமுடியும்.

# அரசை மாற்ற முயற்சி எடுத்தால் மக்கள் போராட்டம் வெடிக்கும்!

## சோமவன்ச அமரசிங்க எச்சரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் மக்களின் ஆணை பிரதிபலிக்கப் பட்டாவிட்டால் அதனைச் சீரமைப்பதற்கான நடவடிக்கை விரைவில் எடுக்கப்படவேண்டுமென மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச தெரிவித்துள்ளார்.



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில், கொழும்பு நகரசபை மைதானத்தில் நடைபெற்ற மே தினக கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மக்களின் விருப்பத்திற்கு மாறாக அரசாங்கத்தை மாற்று வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டால் இலட்சக் கணக் கான மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடும் ஓர் சூழ்நிலை உருவாகும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில்பிரேமஜெயந்த உரையாற்றுகையில், இந்த நாட்டுக்குப் பொருத்தமான பொருளாதார அமைப்பு முறையை ஏற்படுத்துவதன் மூலம் மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்படும்.

அத்துடன், ஐக்கியதேசியக் கட்சியின் ஆட்சியை மக்கள் வெறுத்து ஒதுக்கிவிட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால ஸ்ரீசேன உரையாற்றும் போது,

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் சகல எதிர்ப்புகளையும் முறியடித்து வெற்றிகரமாக முன்னேறிச்செல்லும் எனக் குறிப்பிட்டார்.

(ந-121)

# நாட்டுமக்களுக்குத் தெரியாமல் ஜனாதிபதியின் தீர்வுத்திட்டம் புலிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது

## ஜாதிகஹெல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் சமாதான முயற்சிகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே ஊடாக முன்னெடுத்துச் செல்வதாகக் கூறப்படுவதை ஜாதிகஹெல உறுமய சந்தேகத்துனூடாகவே பார்க்கிறதென அக்கட்சியின் பேச்சாளர் அத்துரலியே ரத்தின தேரர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது தீர்வுத் திட்டம் தொடர்பாகப் புலிகளுக்கு நகல் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். இந்த விடயம் மிகவும் இரகசியமாகவே வைக்கப பட்டுள்ளது. இதனை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

அத்துடன், நாட்டுக்காக மேற்கொள்ளப்படும் எந்தவொரு சமாதான முயற்சியும் நேரடியாகவே முன்னெடுக்கப்படவேண்டும். நாட்டு மக்களுக்குத் தெரியாமல் இரகசியமாகச் செய்யக்கூடிய எந்தவொரு செயற்பாடும் தவிர்க்கப்படுவது அவசியமாகும்.

ஏற்கனவே, ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியில் இருந்த போது நோர்வே ஊடாக மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள முறிவடைந்தமை தெரிந்ததே. இதனைப் போன்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் செய்யக்கூடாது எனவும் அத்துரலியே ரத்தின தேரர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ந-18)

## காங்கேசன் துறைக்கடலில் துப்பாக்கி வேட்டுச்சத்தம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக் கடற்பரப்பில் நேற்று அதிகாலை 3.00மணி முதல் நீண்ட நேரமாக கடற்படைக் கப்பல்களில் இருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இதனைத் தொடர்ந்து கரையோரப் பிரதேசங்களில் குடியிருக்கும் மக்கள் மத்தியில் பெரும் பதற்றமும் பீதியும் ஏற்பட்டிருந்தது.

இந்த வேட்டுக்களுக்கான காரணம் என்னவென்று உறுதிப்படுத்தப்படாதபோதிலும் இது ஒரு பயிற்சி நடவடிக்கையாக இருக்கலாம் என அப்பிரதேச மீனவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

(ந-121)

## சுழற்சி முறையில் பயனாளிகளுக்கு ஆடுகள்

(பொன்னாலை)

வலி.தென்மேற்குப் பிரதேச செயலகத்தின் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ள 5பயனாளிகளுக்கு சுழற்சிமுறையில் ஆடுகள் வழங்கப்படவுள்ளன.

சமுர்த்தி வங்கியில் அங்கத்துவமுடைய 5 பயனாளிகளுக்கு தலா ஒரு ஆடும், வளர்ப்பு நிதியாக 21ஆயிரத்து 500ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

பின்னர் இந்த ஆடுகளின் குட்டிகள் சமுர்த்தி வங்கியினால் கையேற்கப்பட்டு சுழற்சிமுறையில் ஏனையோருக்கும் வழங்குவதற்குரிய வகையில் இத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

(ந-49)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

ஒன்றோ இரண்டோ குழந்தைகளைப் பெற்றபின் கணவனும் மனைவியும், சகோதர சகோதரி போல வாழவேண்டும். அவர்கள் கடவுளைப்பற்றி மட்டும் பேசவேண்டும். அவ்விதமாயின் இருவர் மனமும் கடவுள்பால் இழுக்கப்படும்.

சுவாமி விவேகானந்தர்

## யாழ்.செயலகத்தில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சகல உளளூராட்சி மன்றச் செயலாளர்களுக்குமான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பி.ப.2.00மணிக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (ந-8)

## கட்சியைவிட்டு விலகமாட்டேன்

## ரிஷாத் பதியுதீன் அறிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தனது கட்சியைவிட்டு விலகுவதற்கு திட்டமிட்டு வருவதாக வெளியாகிய செய்திகளை அவர் மறுத்துள்ளார். தான் ஒருபோதும் முஸ்லிம் காங்கிரஸைவிட்டு வெளியேறப் போவதில்லை எனத் தெரிவித்த அவர்,

தனது கட்சியின் உயர் பீடம் எடுக்கும் எந்தத் தீமானதிற்கும் தான் இணங்கியே செயற்படுவேன் என்றார்.

கடந்த 22ஆம் திகதியன்று சபாநாயகர் தேர்தலில் அரசாங்கத்தரப்பிற்கு வாக்களித்தவர் எதிர்க்கட்சியை சேர்ந்த வன்னிமாவட்ட எம்.பி.எனத் தன்னைப்பற்றி வெளியாகிய வதந்திகளையும் அவர் மறுத்தார்.

எனது கட்சி எதிர்க்கடசிக்கே ஆதரவு வழங்குவது என தீமானித்திருந்தது. அதன்படி நான் அங்கு செயற்பட்டேன் அரசாங்கத் தரப்பிற்கு ஆதரவு அளிக்கவில்லை என்றார். (ந-6)

## வெசாக் தினத்தையொட்டி முத்திரைகள் வெளியீடு

(கொழும்பு)

வெசாக் தினத்தையொட்டி, அஞ்சல் திணைக்களத்தின் முத்திரைப் பணியகத்தால் 4வகையான புதிய முத்திரைகள் வெளியிடப்படவுள்ளன.

ரூ.4, ரூ.4.50, ரூ.16.50 மற்றும் ரூ.20 பெறுமதியுடைய முத்திரைகளே குருநாகல் நாகொல்ல ராஜமஹா விகாரையில் நடைபெறவுள்ள விஷேட வைபவத்தில் வைத்து வெளியிடப்படவுள்ளன.

இந்நிகழ்வில், தபால் தொலைத்தொடர்புகள் மற்றும் மலையக அபிவிருத்தி அமைச்சர் டி.எம்.ஜயரத்ன, பிரதியமைசசர் ரோஹித அபே குணவர்த்தன,1 அஞ்சல் மா அதிபர் எஸ்.சேனாதீர ஆகியோர் உட்பட மற்றும் பல பிரமுகர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (ந-18)

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ். : 021 222 3916, 0777 801038
கொழும்பு: T.P.: 2390128, Fax: 2399650, Mob: 0777 517019

## 150வருடம் பழமையான ஆலமரம் சரிந்தது

(யாழ்ப்பாணம்)

150 வருடம் பழமைவாய்ந்த ஆலமரம் ஒன்று நேற்றுப் பாறிவிழுந்துள்ளது.

கோண்டாவில் ஸ்ரேசன் வீதியில் நின்ற பாரிய ஆலமரமே நேற்றுப்பெய்த காற்றுடன் கூடிய அடைமழையினால் சரிந்து விழுந்துள்ளது. (ச)

### நிர்வாண பந்தய ஓட்டம்

## கலாசாரத்தை பேணும் குழு இளைஞர்கள் மீது விசாரணை

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இளைஞர் ஒருவர் 500ரூபா பந்தயத்திற்காக நிர்வாணமாக ஓடிய சம்பவம் தொடர்பாக கலாசாரத்தைப் பேணும் குழுவினர் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம் பெற்ற மேற்படி நிர்வாணப் பந்தய ஓட்டத்தினால் அன்றைய தினம் நள்ளிரவு வரையும் இப்பகுதியெங்கும் பெரும் பரபரப்பும் அமளியும் ஏற்பட்டது.

தமிழர்களின் கலாசாரத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் இச் சம்பவத்தை அடுத்து கலா சாரத்தைப் பேணும் குழுவினர் தீவிர நடவடிக் கையில் நேற்று இறங்கியுள்ளனர்.

நேற்றுக்காலை முதல் கலாசாரத்தைச் சீர்குலைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட, அதற்குத்துணை போன இளைஞர்களைப் பிடித்து விசாரணைக் குட்படுத்தும் நடவடிக்கைகளை கலாசாரத்தைப் பேணும் குழுவினர் ஈடுபட்டனர்.

கலாசாரத்தைப் பேணும் குழுவினரின் நடவடிக்கை தீவிரமானதை அடுத்து சம்பவத்துடன் தொடர்பு பட்ட உரும்பிராய் இளைஞர்கள் சிலர் தப்பியோடித் தலைமறைவாகியுள்ளதாகத் தெரியவருகிறது.

நேற்றுக்காலை ஆரம்பமான இந்த நடவடிக்கை நேற்று இரவு வரை தொடர்ந்தது. இதில் எட்டு இளைஞர்கள் கலாசாரத்தைப் பேணும் குழுவினரால் பிடிக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளனர்.

நிர்வாணமாக ஓடிய இளைஞர் நேற்று இரவு வரை பிடிபடவில்லை எனவும் அவர் தலைமறைவாக இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை இளைஞர்களின கலாசாரச் சீரழிவு நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் கலாசாரத்தைப் பேணும்குழுவினர் உடனடியாக நடவடிக்கை எடுத்ததை அப்பகுதி மக்கள் பலரும் பாராட்டியுள்ளனர். (த)

# இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியா இனியும் நழுவமுடியாது

## அடித்துக் கூறுகிறார் வை. கோபாலசாமி

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை நோர்வே ஊடாக மீண்டும் ஆரம்பித்து வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு இந்தியா தன்னாலான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண்டும்.

இலங்கை விவகாரத்தில் இந்தியா கொண்டிருக்கும் நழுவல் போக்கை இனியும் தொடர்ந்து கடைப்பிடிக்க முடியாதென மக்கள் திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் வை. கோபாலசாமி வலியுறுத்திக் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திபிலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இலங்கை விவகாரம் தொடர்பாக அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையின் திருகோணமலைத்துறைமுகத்தை கைப்பற்றும் நோக்குடனேயே இலங்கையின உள்விவகாரங்களில் அமெரிக்காவும் சீனாவும் தலையிடுகின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு அயல்நாடான இந்தியா தனது பங்களிப்பை வழங்க வேண்டியது இன்றியமையாதது.

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மீளவும் ஆரம்பமாகவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இந்தியா காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக இன்று சர்வதேச சமூகம் அங்கீகரித்துள்ளது. அத்துடன் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக பேரினவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதுடன் அவர்களின் உரிமைகளும் அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளன என்பதை ஒட்டுமொத்தமாக சர்வதேச சமூகம் உணர்ந்துள்ளது. எனவே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டுமாயின் சமாதான முயற்சிகளுக்கு இந்திய அரசு அர்பபணிப்புடனும் விசுவாசத்துடனும் செயற்பட வேண்டும். இது இன்றியமையாததோர் பணியாகும் எனக்குறிப்பிட்டார்.(தி-18)

## நிதி அமைச்சருடன் ஹெல்கீசன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவையும் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இப்பேச்சுக்களின் போது அபிவிருத்திப்பணிகளுக்கான சர்வதேச உதவிகளைப் பெற்றுத் தருவதில் நோர்வே முக்கிய பங்கு வகிக்கவேண்டும் என நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சரை கலாநிதி சரத் அமுனுகம கேட்டுக்கொண்டார். (ம)

## நோர்வேத் தூதுக்குழுவினரை கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பர்

(நமது நிருபர்)

இடை நிறுத்தப்பட்டிருந்த சமாதானப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கென இலங்கை வந்துள்ள நோர்வே நாட்டின் தூதுக்குழுவினரை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நாளை செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசவுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நோர்வேத் தூதுக்குழுவினரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த முன்னர் தாங்கள் ஒன்றுகூடி பேச்சுவார்த்தையில் இடம்பெறக் கூடிய முக்கிய அம்சங்கள் குறித்த அம்சங்கள் குறித்து கலந்துரையாடுவர்.

இச்சந்திப்பின் போது இடை நிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சு வார்த்தையை விட்ட இடத்திலிருந்து தொடர வேண்டும் என்றும் அரசியல் ரீதியான இயல்பு நிலையை மீளவும் ஏற்படுத்த வேண்டும் என்றும் தூதுக்குழுவினரிடம் வற்புறுத்தவுள்ளதாகக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

## நாடகப் போட்டியில் இன்று பங்குபற்றலாம்

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாண கலாார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் யாழ் மாவட்ட நாடக மன்றங்களுக்கிடையேயான நாடகப் போட்டியில் மழை காரணமாக நேற்றைய தினம் பங்குபற்றமுடியாத நாடக மன்றங்கள் இன்றைய தினம் போட்டிகளில் பங்குபற்றமுடியும் என யாழ்.மாவட்ட இணைப்பாளர் திருமதி மைதிலி விசாகரூபன் அறிவித்துள்ளார். இன்றைய போட்டிகள் யாழ். வேம்படி மகளிர்கல்லூரியில் இடம்பெறும். (ந)

### அமைச்சர் ஹெல்கீசன் .....

ஆர்வத்தை ஜனாதிபதி வெளிப்படுத்தியதுடன்.வடக்கு கிழக்குப் பகுதிகளில் புனர்வாழ்வுப் பணிகளை விடுதலைப் புலிகளின் ஈடுபாட்டுடன் மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை கால அட்டவணையின் அடிப்படையிலேயே மீண்டும் ஆரம்பிக்கப் போவதாக நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனிடம் ஜனாதிபதி தெரிவித்திருப்பதாக ஜனாதிபதியின் பேச்சாளர் ஜனதாச பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சரினதும், ஜனாதிபதியினதும் நேறறைய் சந்திப்பு பயனுள்ளதா கவும், ஆக்க பூர்வமாகவும் அமைந்திருந்ததாக நோர்வே தூதரக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ம)

### படகில்...

அலையில் தத்தளித்தவாறு படகு வந்துகொண்டிருந்தபோது படகின் அணியப் பகுதியில் இருந்த பிரஸ்தாப நபர் கடலினுள் தூக்கி வீசப்பட்டு அலையினால் அடித்துச் செல்லப்பட்டார். சம்பவம் இடம்பெற்று சிறிது நேரத்தின் பின் அப் பகுதிக்கு இலங்கை கடற்படையினரின் படகில் வந்த போர்நிறுத்த கண்காணிப்பு குழுவினரும், கடற்படையினரும் தேடுதல் நடத்திய போதும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதேவேளை சம்பவத்தை கேள்வியுற்ற நெடுந்தீவு கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த மீனவர்கள் 15 படகுகளில் தேடுதல் நடத்தியபோதும் அவரை கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் தேடுதல் நடவடிக்கை மீண்டும் இன்று காலை தொடரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். சென்ஜோன்ஸ் கலலூரின் பொருளியல் ஆசிரியரான ஜெயசீலன் சிறந்த ஹொக்கி விளையாட்டு பயிற்றுவிப்பாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

### மலையகம் ...

முன்னணி அறிவித்துள்ளது.

இதேவேளை நுவரெலிய பொலிஸ பிரிவுக்கு தமிழ் சிரேஷ்ட உதவி அத்தியட்சகரை நியமிப்பது படுகொலை சம்பவத்திற்கு காரணமான கந்தப்பொலவில் அமைக்கப்பட்டிருக்கும் பொலிஸ் நிலையத்தை உடனடியாக அகற்றுவது தொடர்பில் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுப்பது ஆகிய தீர்மானங்களை மலையக மக்கள் முன்னணி எடுத்துள்ளது.

இது இவ்வாறிருக்க தமிழ் தேசிய கூட்டமைப்பும் மலையக மகள் முன்னணியுடன் இணைந்து போராட்டங்களை முன்னெடுக் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-121)

சங்குநாதம்




சந்திரிகாவின் அம்பு கதிர்காமர் இந்தியா பறந்தது ஏன்? –கோவையூர் ஜெயன்

விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல் சமாதானத்தை சீர்குலைக்கும் –டொறிங்ரன்

கே.வி. குணசேகரம் எழுதும் கல் தூண்கள்

வியாசர் பதில்கள்

ஆலடி மாநாடு

மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்

வெள்ளி வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

விலை ரூபா: 16.00

**V.S.P விலை அதிகரிப்பு**

பரிமளா ஸ்ரோர்ஸ் தயாரிப்பான **V.S.P.** நல்லெண்ணெய் **01.05.2004** சனிக்கிழமை முதல் **10/=** ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகினறோம்.

பரிமளா ஸ்ரோர்ஸ் **26A** மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்.
(8378) T.P. :2222785

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆண்டு 1ல் இருந்து பட்டப்படிபபு வரை **'Spoken English', Grammar By.** ***விக்னேஸ்வரன்*** ஆச்சாரி **(Dip. in English and Science) 426(302) K.K.S.** வீதி, யாழ்ப்பாணம், -பிளாக் வீதி, சங்கானை.

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.05.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.